# ஒற்றுமையாக இயங்க உமாமகேஸ்வரனும் இணக்கம்

[சென்னை]

சென்னையில் முகாமிட்டு, கடந்த பல மாதங்களாக எதிரும் புதிருமாக இயங்கிய தாகக் கூறப்பட்ட இரண்டு இலங்கை தீவிரவாத தமிழ் இளைஞர் கோஷ்டி, மீண்டும் இணைந்துகொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொன்னேரி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட உமாமகேஸ்வரன் தமது வழக்கறிஞர்களிடம் தெரிவித்திருந்த கருத்தை அடிப்படையகக் கொண்டே மேற்படி தகவல்

(8-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 1-00

ஈழநாடு
THE EELANADU

மலர் 24 வைகாசி 22 ஷ்பா 12 இதழ் 112
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 5-6-82

A/L 83 புதிய வகுப்பு!
இன்று ஆரம்பம்
தூய பிரயோக கணிதம்
ரவிமோகன்
05-06-1982
Pure—2 p.m.
App—3-30 p.m.
மணியம்ஸ் கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(நாகவிகாரை-ஸ்ரீதர் சினிமாவுக்கு இடையில்) 3414

# இலங்கை தீவிரவாத பெண் அங்கையற்கண்ணி தமிழ் நாட்டில் கைது!

## மாணவர் இயக்கத் தலைவி என தமிழக பொலிசார் அறிவிப்பு

(சென்னை)

இலங்கை வடபகுதியைச் சேர்ந்த தீவிரவாத இளம்பெண் ஒருவர் நேற்று தமிழக பொலிசாரினால் சென்னையில் கைது செய்யப்பட்டார்.

30 வயதுடைய அங்கையற்கண்ணி எனும் பெயருடைய தமிழ் ஈழ தீவிரவாத பெண்மணியே நேற்று கைது செய்யப்பட்டதாக சென்னைப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ் ஈழமாணவர் தீவிரவாத இயக்கம் ஒன்றின் தலைவியாக செல்வி அங்கயற்கண்ணி இருந்து வந்தார் என்று தமிழகப் பொலிசார் நேற்று தெரிவித்தனர்.

'தமிழ் ஈழ விடுதலைப் புலிகள்' என்று கருதப்படும் உமாமகேஸ்வரன், பிரபாகரன் கோஷ்டியினர் அண்மையில் தமிழ்நாட்டில் கைது செய்யப்பட்ட பின்னர் தமிழகப் பொலிசார் நடத்திவரும் தீவிர வேட்டையின்போதே அங்கையற்கண்ணியை பொலிசார் நேற்று கைது செய்தனர் என அறிவிக்கப்பட்டது.

## குவைத் ராஜதந்திரி புதுடில்லியில் சுட்டுக்கொலை

புதுடில்லி, ஜூன் 4

புதுடில்லியிலுள்ள குவைத் தூதரகத்தின் முதலாவது செயலாளர் ஜனுப் முஸ்தபா அல்-மஸ்றாக் இனந்தெரியாத நபரினால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஜனுப் மஸ்றாக் இன்று காலை தமது இல்லத்துக்கு வெளியே

(8-ம் பக்கம் பார்க்க)

## லண்டனில் தப்பிய சந்திரசேகர புத்தளத்தில் கைது!

(கொழும்பு)

போதைப் பொருட்களைக் கடத்தியதாக லண்டனில் குற்றம் சாட்டப்பட்ட இலங்கைத் திரைப்படத் தயாரிப்பாளர் மனிங் சந்திரசேகராவை புத்தளத்தில் வைத்து சுங்கப்பகுதியினரின் உதவியுடன் பொலிசார் கைது செய்துள்ளனர்,

இவர் கைது செய்யப்பட்டபோது பெளத்தமதகுரு போன்று உடையணிந்திருந்ததாக சுங்கப்பகுதி பிரதம அதிகாரி திரு. திஸநாயக்கா தெரிவித்தார்.

போதைப் பொருட்களை கடத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட மனிங் சந்திரசேகரா லண்டனிலிருந்து தப்பிச் சென்றிருந்தது தெரிந்ததே.

(வெ)

## காங்கிரஸ் செயற்குழு இன்று கூடுகிறது

[யாழ்ப்பாணம்]

தமிழ்க்காங்கிரசின் செயற்குழுக் கூட்டம் இன்றுகாலை தமிழ்க்காங்கிரஸ் அலுவலகத்தில் தலைவர் திரு. எஸ். ஆர் கனகநாயகம் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

தமிழ்மக்களின் இன்றைய நிலை, இளைஞர்கள் பிரச்னை பற்றி இக்கூட்டதத்தில் ஆராயப்படும் முக்கிய சில தீர்மானங்களும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொதுச்செயலாளர் திரு குமார் பொன்னம்பலம் இக்கூட்டத்தில் கலந்து கொள்வார். [மா]

## இறைகுமாரன், உமைகுமாரன் துப்பாக்கிச்சூடு தேடப்பட்டவர் கைது!

### ஒருவர் தேடப்படுகிறார்!

(யாழ்ப்பாணம்)

இறைகுமாரன், உமைகுமாரன் துப்பாக்கிச்சூட்டு மரணம் சம்பந்தமாக தீவிரவிசாரணைகளில் ஈடுபட்ட ஆயுதப்படையினர் சந்தேகத்தின்பேரில் இளைஞர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

யாழ். மணியந்தோட்டத்தைச்சேர்ந்த இந்திரன் என்ற இளைஞரே கைதுசெய்யப்பட்டு குருநகர் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுளளார்.

இவரை மேலும் விசாரணை செய்தபோது பல மர்மங்கள் துலங்கியுள்ளனவாம்.

வட்டுக்கோட்டைஇந்துக்கல்

[8-ம் பக்கம் பார்க்க]

உ



திறப்பு விழா அழைப்பு

இன்று[5-6-1982] யாழ். நகர் கஸ்தூரியார் வீதியில் நண்பகல் 12-மணிக்கு வரும் சுபவேளையில் ஆரம்பமாக விருக்கும்

ரூபி ஜுவல்லறி

திறப்பு விழாவில்

நண்பர்கள், அன்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இங்ஙனம்

பொற்கொல்லர் வீதி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

எஸ். நந்தகோபால்,
111/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உத்தரவாதமுள்ள 22 கரட் தங்க நகைகளை ஓடர்செய்து பெற்றுக்கொள்ள

ரூபி ஜுவல்லறி

இல: 111/1, கஸ்தூரியார் வீதி — யாழ்ப்பாணம் 3308



திருமண அழைப்பு

நிகழும் துந்துபி ஆண்டு வைகாசித்திங்கள் 24-ம் நாள் (7-6-1982) திங்கட்கிழமை முற்பகல் 11-10 மணிமுதல் பிற்பகல் 1-15 மணி வரையுள்ள சிங்கலக்கின சுபவேளையில்

| எமது சகோதரன் | எமது மகள் |
|---|---|
| திருநிறைசெல்வன் | திருநிறை செல்வி |
| சிவகுமாரனுக்கும் | சந்திரிகாவுக்கும் |

வண்ணை அரசடி விநாயகர் ஆலய முன்றலில் அமைந்துள்ள ரசிக ரஞ்சனசபா மண்டபத்தில் திருமணம் நடைபெறவுள்ளது. அவ்வமையம் தங்கள் சுற்றஞ்சூழ வருகைதந்து மணமக்களை வாழ்த்துமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

மணமகனில்லத்தில் அன்று மாலை 5-30க்கு நடைபெறும் வரவேற்புபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

கா கு. தவராஜதேவாவும்
பாரியாரும்
7, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

ச. கி. அப்பலவாணரும்
பாரியாரும்
248 (622), மானிப்பாய் வீதி
யாழ்ப்பாணம்,

3463

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

புனரமைக்கப்பெற்ற Honda C/90, C D 125 ருவின் செல்வ் ஸ்ராட்டர் மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. நா. சாம்பசிவம் அன் கோ, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 3434

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்ட வீதியில் கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் ஒன்றரைப்பரப்பு வெறுங்காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு கலா ஜோதி மில், 51/10, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம். 3372

அலிசேசன் ஆண்நாய்க்குட்டி (8 மாதம் விற்பனைக்குண்டு. உடன் நேரில் வரவும். விலை 1200/-. P. M. சர்மா, துளசி, சிவன்கோவில்வீதி, சாவகச்சேரி. 3442

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகாமையில் வீடு வளவு எட்டுப் பரப்பு மின்சார வசதியுடன் உண்டு. சங்கானை சந்தைக்கு அருகாமையில் 5 கடையுடன் ஐந்தரைப் பரப்பு நிலமும் கிணறும். தொடர்புகளுக்கு: ஸ்கந்தராசா, கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை. 3450

அல்சேஷன் × டோபமன் பிஞ்சர் கலப்பு இன நாய்க் குட்டி விற்பனைக்கு உண்டு. சிறந்த காவல் காக்கும் இனம் இல 20, ராசாவின் தோட்டம் றோட் யாழ்ப்பாணம். 3452

பசுமாடு உடன் விற்பனைக்குண்டு. ஜேசி இனம் (சினை). 13 போத்தல் கறக்கக்கூடியது. ''அசோக் பவான்'' 112, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3440

வற்றாப்பளை அம்மன் கோவிலில் அமைந்திருக்கும் எமது விளம்பர நிலையத்தில், அண்ணா கோப்பி, அண்ணா பத்தி அண்ணா பற்பொடி, சோயாரின் மற்றும் எமது உற்பத்திப் பொருட்களை வாங்கி இனும் பொருட்களையும் பரிசுக் கூப்பன்களையும் பெற்றுக் கொள்ளுங்கள். அண்ணா தொழிலகம், இணுவில். 3417

பளை தோட்டத்தில் மாங்காய் தொகையாக விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க நடராஜா, மனேஜர், பவர் அன் கொம்பனி, 5, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 3458

84 ஸ்ரீ 5100 தொடர் இலக்க நீலநிற HONDA C 70மோட்டார் சைக்கிள் புத்தம்புதிய நிலையில் விற்பனைக்குண்டு. செ. தர்பராஜா, பழைய தெரு, கோப்பாய் தெற்கு. 3459

## தேவை

Refrigerator Technicians (குளிர்சாதனப்பெட்டி மெக்கானிக்குகள்) குளிர்சாதனப் பெட்டிகள் திருத்துவதிலும், பெயின்ற் அடிப்பதிலும் நன்கு அனுபவமுள்ள மெக்கானிக்குகள் உடன் தேவை. திருப்திகரமாகச் சேவைசெய்தால் உற்பத்திச் சாலையில் பயிற்சி அளிக்கக்கூட ஒழுங்கு செய்யப்படும். அனுபவத்தையும், எதிர்பார்க்கும் சம்பளத்தையும் குறித்து நற்சான்றிதழ்களுடன் எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3435

## தேவை

மோட்டார் சைக்கிள் மெக்கானிக் நன்கு- அனுபவமுள்ளவர்கள் மட்டுமே எதிர்பார்க்கும் ஊதியத்தைகுறித்து நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3456

வான் சாரதி — நடுத்தர வயதுள்ளவராய், வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலைகளில் உதவிசெய்யக்கூடிய குடிப் பழக்கமில்லாதவர்களுமே நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3455

ஸ்ரூடியோவில் எல்லா வேலைகளும் தெரிந்த இளைஞரும் பழக ஆர்வமுள்ளவர்களும் தேவை. தரன்ஸ்ரூடியோ, 9, நவீனசந்தை, யாழ்ப்பாணம். போன். 7858. (3444)

சகல வசதிகளுடன் கூடிய ஒரு சிறிய வீடு அல்லது பகுதி வீடு யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் வாடகைக்கு தேவை. யாழ். வேம்படி கல்லூரி, யாழ் மத்திய கல்லூரிகளுக்கு அருகாமையில் இருப்பது விருப்பத்தக்கது. தரகர்களுக்கு கொமிஷன் கொடுக்கப்படும். கடிதம் மூலம் தொடர்புகொள்ளவும். விளம்பர இலக்கம்: 3451, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3451

## பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வ/து பருத்தித்துறை

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மொத்த விற்பனைக் களஞ்சியத்திலிருக்கும் சுமார் 3,706 வெற்றுச் சாக்குகள் இனவாரியாக எதிர் வரும் 12-06-82 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு சங்கக் கட்டிடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலக்கூற்றில் வெற்றிபெறுவோர் ஏலக்கூற்றில் பெற்ற பொருட் பெறுமதியை உடனே சங்கக் காரியாலயத்தில் கட்டி ரசீது பெற்று தமக்குரிய பொருட்களை உடன் ஏற்றிச் செல்லுதல் வேண்டும்

தலைவர்,
பரு. ப. நோ கூ. சங்கம்.
1982-06-02. 3437

## வெற்றுப்போத்தல் விற்பனை யா. அ. ச. உபஅலுவலகம் அனலைதீவு

350 வெள்ளை நிறமான 24 அவுன்ஸ் வெற்றுப்போத்தல்கள் விற்பனைக்குண்டு. வாங்குவோர் ஒரு போத்தலுக்கான தங்களின் கேள்விகளை 17-6-82க்கு முன்னர் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர், யா. அ. ச. உப அலுவலகம், அனலைதீவு என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கவும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வெற்றுப் போத்தல் கேள்வி'' எனக் குறிக்கப்படல் வேண்டும்.

சி. பாலரத்தினம்
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்
யா. அ. ச. உபஅலுவலகம்
அனலைதீவு,
1-6-82
3454

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம்
மாவட்ட நீதிமன்றத்தில்

தெல்லிப்பழை தையிட்டிப்புலம் என்னுமிடத்தைச் சேர்ந்த சேனாதிராசா இராமேஸ்வரன் பெண் சரஸ்வதிதேவி என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தின் விடயத்தில்...

மரணமெய்தியவர்

மயில்வாகனம் பொன்னம்பலம் 'சரஸ்தான்', தையிட்டிப்புலம், தெல்லிப்பழை

மனுதார்

மரணசாதன
நியாயாதிக்கம்
வழக்கு இல. ரி/129

எதிராக

1. மயில்வாகனம் பொன்னம்பலம் பெண் செல்லம்மா தெல்லிப்பழை
2. சேனாதிராசா இராமேஸ்வரன் கெலனியா, கொழும்பு

எதிர்வாதிகள்

மேற்படி இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலேபெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதகிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982ம் ஆண்டு ஆனிமாதம் 9ம் திகதி காலை 9 மணிக்கு அல்லது அதற்குமுன் இந்நீதிமன்றத்தின்முன்னரேதோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றூர்.

நீதிமன்றக் கட்டளைப்படி

சு. வ. கணேசன்
பதிவாளர்

1982ம் ஆண்டு சித்திரை மாதம் 8ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

தயாரித்தவர்
கு. விசுவலிங்கம்
மனுதாரின் சட்டத்தரணி.
3443

# இன்றைய பலன்

வகாசி மாதம் 22ம் திகதி
சனிக்கிழமை
(5—6—82)

மேடம்: சிந்தனைகளின் தாக்குதல் உங்கள் உடல் நிலையைப் பாதிக்கும், மனதில் அமைதி குன்றும், திடீர் முடிவுகளைத் தவிர்த்துக்கொள்ளவும், தொழில்துறையிலும் தொல்லைகள் தோன்றும்.

இடபம்: வாழ்க்கை மலர் தூவிய மஞ்சமாகக் காட்சியளிக்கும், இன்பத்தின் எல்லைக்கே இழுத்துச் செல்லப்படுவீர்கள், சுற்றுலா மேற்கொள்ளும் விருப்பம் மேலிடலாம்.

மிதுனம்: கடமையில் தடை ஏற்படும், பிறர் நம்பிக்கையைத் தவிர்க்கவும், தீர்க்கமான சிந்தனையே சிறப்பைத் தரும், நிதானம் விரும்பத்தக்கது.

கடகம்: நீண்டநாள பிரச்சினையில் சமரச முடிவு காணப்படும், தன வரவுக்கும் இடமுண்டு, பிதாவழி ஆதரவு கிடைக்கும், நல்ல தினம்

சிங்கம்: தங்கக்குணம் மேலிடும், மதிப்புக் கிடைக்கும், இனத்தவர்களுடன் தொடர்புகள் பெருகும். உழைப்பினுல் பலனும் உற்சாகமும் பிறக்கும், நல்லதினம்.

கன்னி: பொருளாதார நிலை சீரடையும், சிலர் வாழ்க்கையில் எதிர்பாராத பொருள் வரவுக்கும் இடமுண்டு. பத்திரிகையாளர்களின் வேதனம் உயர்த்தப்படலாம். பொன்னான தினம்.

துலாம்: உறவு முறைகளில் வெடிப்பு ஏற்படும், பண விவகாரத்தின்மூலம் பகை தோன்றலாம், தொழில்துறையில் அதிக கவனம் வேண்டும், துக்கதினம்.

விருச்சிகம்: ஏமாற்று வேலைகள் இடம் பெறும், வியாபாரிகள் புதிய முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும், குடும்பத்தில் அமைதி குன்றும், நன்றாக ஆலோசித்த பின்பே எந்த நடவடிக்கையையும் எடுக்கவும்.

தனு: வாழ்வுப்பயணத்தில் வளமான திருப்பம் ஏற்படும் இலட்சியவாதிகள் பூரிப்படைவார்கள் குடும்பத்தில் சுமுகமான சம்பவம் இடம்பெறும்.

மகரம்: வெளியிடத்துப் பயணம் வேதனையைத் தரலாம் வேண்டாத உறவுகளைத் துண்டித்தல் நன்று எதிலும் அவசர புத்தியைத் தவிர்த்துக் கொள்ளவம்.

கும்பம்: இதயத்தில் ஏக்கம் இன்று தணியும் தேடிய பொருள் காலடியில் சரணடையும் பரோபகாரச் சிந்தை மேலிடும் நண்பர் ஒருவர் கைகொடுத்து உதவுவர்.

(7-ம் பக்கம் பார்க்க)

AUTO COOL HELPS JAFFNA

**To Build up in Computer Technology**

We have the pleasure in announcing that the following work will be undertaken from 1st June 1982.

1. COMPUTER CONSULTING
2. DATA PROCESSING
3. WORD PROCESSING
   and SIMILAR other JOBS.

NEW COMPUTER CLASSES COMMENCE: June 1982.

Instructor: N. S. RAJAH B. Sc. Hons (U. K.) (Former Computer Consultant of Messrs. B. C. Ltd., U. K.)

Practical will be given in at least two different type Computers. (Micro and Terminal base Computer.)

Language: Basic and Fortan
For further details:

**AUTO COOL ENGINEERS**
KANDAPPASEGARAM ROAD,
(Opposite Santhi Cinema)
JAFFNA.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

**இன்று மாலை இசை இரவுகள்**

**5-06-82**

புதுமை!! இனிமை!!! ஆனந்தம்!!!!

ஷோபா, கிரியேஷன்ஸ் ஆதரவில் கே. ஆர். மகேந்திரனின்

**ராகம் தாளம் - பல்லவி**

புதுமைத் திரை இசைப்பாடல்கள்

**டிக்கட் ரூபா 5/-** டிக்கட் மண்டப வாசலில் கிடைக்கும்.

நிகழ்ச்சியை சிறப்பிக்க வாழ்த்துவோர்:

- கே. நாகமுத்து அன் சன்ஸ் 48/50, பெரியகடை, யாழ்ப்பாணம்
- சன்லைற் றைகிளினேர்ஸ், பெரிய கடை, யாழ்ப்பாணம்.
- ஷமி ஹாட்வெயர்ஸ், 234/2, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
- ரூபன் ரவல்ஸ், யாழ்ப்பாணம்
- சன்யு என்ஜினியர்ஸ், கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
- மணிக்குரல் விளம்பர சேவை, யாழ்ப்பாணம்

3446

# ஆர்ஜென்டீன நிலைகள் மீது பீரங்கி, ரொக்கட் தாக்குதல்!

## சரணடையக்கோரி துண்டுப்பிரசுரம் வீசப்படுகிறது

லண்டன், ஜூன். 4

போக்லண்ட்தீவுகளில் ஆர்ஜென்டீனப் படைகளின் நிலைகள்இருக்கும் இடங்களில் பிரிட்டிஷ் ஹாரியர் விமானங்கள் ஏராளமான துண்டுப் பிரசுரங்களை நேற்று வீசி எறிந்தன.

போக்லண்டில் இரத்தப் பெருக்கை பிரிட்டன் விரும்பவில்லையென்றும் ஆர்ஜென்டீனப் படைகள் பிரிட்டிஷ் துருப்புகளிடம் சரணடைந்துவிடவேண்டும் என்றும் இந்தப்பிரசுரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சரணடையும் ஆர்ஜன்டீனப் படைகளுக்குத் தகுந்த பாதுகாப்பும் பராமரிப்பும் அளிக்கப்படும் என்றும் அப்பிரசுரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் போக்லண்டில் உள்ள ஆர்ஜன்டீன நிலைகள் மீது பிரிட்டிஷ் படைகள் பீரங்கிகளாலும், ரொக்கட்டுகளாலும் தொடர்ந்து தாக்கி வருகின்றன. இத்தாக்குதல்களுக்கு ஆர்ஜன்டீனப் படைகளிடமிருந்து வலுவான எதிர்ப்பு இருக்கவில்லையென்று பிரிட்டிஷ் ராணுவத் தலைமை அறிவித்தது. எதிர்த்தாக்குதல் அங்கொன்றும் இங்கொன்றுமாகவே வலுவற்றதாக இருக்கிறது என்று அவர்கள் கூறினார்கள்.

இதேசமயம் போக்லண்ட் மீது இறுதியாகக் கடுமையான தாக்குதல் ஒன்றை மேற்கொள்ள பிரிட்டிஷ் படைகள் தயாராகி வருவதாக அறிவிக்கப்பட்டது.

14 நாட்களுக்குள் போக்லண்ட் தீவுகளிலிருந்து ஆர்ஜன்டீனப் படைகள் விலகிச் செல்லவேண்டும் என்று பிரிட்டன் விடுத்துள்ள கோரிக்கைக்கு பதிலளிக்க ஆர்ஜன்டீனாவுக்கு இரண்டுநாள் அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் லண்டனில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

### பாதுகாப்புச் சபை ஆலோசனை

போக்லண்ட் போர் நிறுத்தத்துக்கு வழிகோலும் தீர்மானத்தின் மீது ஆலோசனை நடத்துவதற்கு ஐ நா.பொதுச்சபை இன்று மாலையில் மீண்டும் கூடுவதற்கு முடிவு செய்திருந்தது. நேற்றைய கூட்டத்தில் பனமாவும் ஸ்பெயினும் கூட்டாகக் கொண்டுவந்திருந்த தீர்மானத்தில் திருத்தங்களைச் செய்ய இருநாடுகளும் இணக்கம் தெரிவித்துள்ளன. முன்பதாக அத்தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டால் தனது தடை அதிகாரத்தைப் பிரயோகிக்கப்போவதாக பிரிட்டன் எச்சரிக்கை விடுத்திருந்தது. தீர்மானத்தைத் திருத்தத்துடன் ஏற்றுக்கொள்ள பிரிட்டன் விருப்பம் தெரிவித்திருப்பதாகத் தெரிகின்றது.

# யாழ். அரசாங்க அதிபர் மேற்கு ஜேர்மன் பயணம்.

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசாங்க அதிபரும், மாவட்ட அபிவிருத்தி சபைச் செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா மேற்குஜெர்மனிக்குச் சென்றுள்ளார்.

உலக கிறிஸ்தவ திருச்சபை மாநாட்டில் இலங்கையின் பிரதிநிதியாகக் கலந்து கொள்வதற்காகவே இவர் அங்கு பயணமானார்.

பதில் யாழ். அரசாங்க அதிபராக மேலதிக அரசாங்க அதிபர் திரு எஸ் எஸ். தர்மபாலன் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு தேவநேசன் நேசையா நாடு திரும்பும் வரை பதில் யாழ் அரசாங்க அதிபராகவும், மாவட்ட அபிவிருத்தி சபைச் செயலாளராகவும் திரு. எஸ். எஸ் தர்மபாலன் கடமையாற்றுவார். (வெ)

## பாக் - இந்திய உறவுகளைச் சீர்படுத்தும்

கராச்சி, ஜூன் 4.

பாகிஸ்தான் அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்துவதற்கு இந்திய வெளிஉறவுப் பணிமனைக் காரியதரிசி திரு. நத்வத்சிங் இஸ்லாமாபாத் வந்திருப்பது இரு நாடுகளுக்குமிடையில் உறவுகளை சீர்படுத்தும் முகமாக ஒருநடவடிக்கையென்று பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஷியா வுல் ஹக் கூறியிருக்கிறார். அணிசேரா நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ள செல்லும் வழியில் பத்திரிகையாளரிடம் அதிபர் ஷியா வுல் ஹக் பேசினார்.

இந்திய-பாகிஸ்தான் போர் நிறுத்தம் தொடர்பான பேச்சுக்களுக்கு இன்னமும் திகதி நிர்ணயம் செய்யப்படவில்லை என்று அவர் கூறினார்.

## தூதுவர் சுடப்பட்டார்

லண்டன், ஜூன். 4

பிரிட்டனிலுள்ள இஸ்ரேலியத் தூதுவர் திரு. ஆர்கோ துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்தப்பட்டார்

இனந்தெரியாத நபர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட இக்கொலை முயற்சியின்போது சம்பந்தப்பட்ட நபரும் காவலர்களால் சுடப்பட்டுக் காயமுற்றார். இருவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

## தலைவரானார்

ஹவானா. ஜூன் 4.

ஹவானாவில் நடைபெறும் அணிசேராநாடுகளின் அமைச்சர்கள்மட்ட மகாநாட்டில் பொருளாதாரக் குழு ஒன்று நிறுவப்பட்டது இக்குழுவின் தலைவராக ஐ நவில் இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியாகவிருக்கும் திரு.என் கிருஷ்ணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

# அமைதிஏற்படஆர்ஜென்டீனா வெளியேறவேண்டும்

## யு. எஸ். -- பிரெஞ்சுஅதிபர்கள் விருப்பம்

பாரிஸ், ஜூன். 4

பாரிஸ் வந்திருக்கும் அமெரிக்க அதிபர் ரெகனல்ட் ரீகனும் பிரெஞ்சு அதிபர் மிட்ரான்கும் நேற்று பூர்வாங்க ஆலோசனைகளை ஆரம்பித்தார்கள்;

இரு தலைவர்களும் சுமார் இரண்டு மணிநேரம் உலக விவகாரங்கள் பற்றி ஆலோசித்தனர். இந்த ஆலோசனைகளின் பின்னர் திரு ரீகன் பத்திரிகையாளர்களிடம் பேசும்போது, உலக விஷயங்கள் பலவற்றைப் பற்றியும் தாங்கள் ஆலோசித்ததாகவும் குறிப்பாக பிரிட்டிஷ் – ஆர்ஜன்டீன விவகாரம் குறித்து ஆலோசித்ததாகவும் தெரிவித்தார். மேற்காசிய மற்றும் உலக விவகாரங்கள் பேச்சுக்களில்இடம்பெற்றதாக அவர் கூறினார்.

போக்லண்ட் விவகாரத்தில் அமைதிஏற்படவேண்டுமானால் முதலில் ஆர்ஜன்டீனா தனது ராணுவத்தை அப்புறப்படுத்த வேண்டும் என்று இரு தலைவர்களும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அமெரிக்கஅதிபர் ரெனல்ட் ரீகன் ஐரோப்பிய விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று பாரிஸ் வந்துசேர்ந்தார். அவருடன் அவரது மனைவி நான்ஸி, ராஜாங்க அமைச்சர் அலெக்சாண்டர் ஹேக், மற்றும் அதிகாரிகள் வந்துள்ளனர்.

ஜனாதிபதி ரீகனும் பிரஞ்சு அதிபர் மட்ரான்டும் இன்று மீண்டும் கூடி விரிவான பேச்சுக்களை நடத்தவிருக்கிறார்கள்.

இதன்பின் வார் சேல் சில் நடைபெறவிருக்கும் ஏழு கைத்தொழில் நாடுகளின் மகாநாட்டில் அவர் கலந்துகொள்ளவிருக்கிறார்.

ஐரோப்பிய சுற்றுப்பயணத்தின்போது ரோம், லண்டன், பொன், பேர்வுன் ஆகிய தலைநகர்களுக்கும் விஜயம் செய்வார்.

### மாங்குளம் கொலைவழக்கு:

# 12 நாள் விசாரணையின் பின்னர் எதிரி விடுதலை!

(வவனியா)

மாங்குளம் தேவராஜா கொலை வழக்கு 12 நாள் விசாரணையின்பின் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வழக்கு வவனியா மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. ரி. என். அபயவீர முன்னிலையில் நடைபெற்றது

இவ்வழக்கில் 79 ஏப்றல் 6ம் தேதி மாங்குளத்தில் வைத்து இலுப்பைக்குளம் வாசியான சின்னத்துரை தேவராசா என்பவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாகவும், அதே நேரத்தில் அதே இடத்தில் சேகுராவத்தர் இஸ்மயில் என்பவரைச் சட்டுக் கொலை செய்ய முயற்சித்ததாகவும், மாங்குளத்தைச் சேர்ந்த முகமது அசனார் இஸ்மாயில் அல்லது சாலி என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி கனக மனோகரன், சட்டத்தரணி எம்.சசாங்கன், சட்டத்தரணி கே. எஸ். பாலகிருஷ்ணன் ஆகியோரின் உதவியுடன் ஆஜரானார். அரச தரப்பில் அரசசட்டத்தரணி திரு. ஹர்ஷா ஹமலத் ஆஜரானார்.

கடந்த வருடத்தில் இதே வழக்கு வவனியா மேல் நீதிமன்றத்தில் தமிழ் ஜூரர்கள் முன்னிலையில் யாழ், மேல் நீதிமன்ற நீதிபதி ஜனப் எம். ஜாமீலின் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு 9 நாள் விசாரணையின்பின் கொலை முயற்சி குற்றச்சாட்டில் எதிரி சுற்றவாளியாகக் காணப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

கொலை குற்றச்சாட்டில் எதிரி 4–3 என்ற விகித அடிப்படையில் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டதால் நீதிபதி அதனை நிராகரித்து மீள் விசாரணைக்குஉத்தரவிட்டிருந்தார்.

மீண்டும் விசாரணை சிங்களம் பேசும் ஜூரிசபையினர் முன்னிலையில் நடைபெற்றது, அரச சட்டத்தரணி ஹர்ஷா ஹமலத் ஒரு மணி நேரம் சிங்களத்தில்தொகுப்புரை நிகழ்த்தினார் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி கனகமனோகரன் சுமார் 6 மணி நேரம் ஆங்கிலத்தில் தொகுப்புரை நிகழ்த்தினார் இதைத் தொடர்ந்து நீதிபதி உரை நிகழ்த்திய பின் ஜூரிசபையினர் கூடி ஆலோசனை செய்தபின் எதிரி சுற்றவாளி என தெரிவித்தனர். (க)

மிளகாய் இலைச் சுருளைத் தடுத்து
அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF
குமுலுஸ் எஸ்

நீரில் கரையக் கூடிய
80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைகளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது

இது ஒரு
''மேற்கு ஜெர்மனி 'BASF''
தயாரிப்பாகும்.




குமுலுஸ் எஸ்
500 கிராம் ரூபா 12/50

இடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

M LIMITED மக்வுட்ஸ் ஸ்தாபனம்
297, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
தொலைபேசி: 32941-5

Metropolitan

**மணிவாக்கு**

படிக்கத் தெரியாதவனைப் போலவே படிக்கத் தகாதவைகளைப் படிப்பவனும் எழுத்து வாசனை அற்றவனாகிறான்.

— ஹென்றி தோ ( ị

# நமது நோக்கு

## சுற்றுடலும் அபிவிருத்தியும்

உலக சுற்றுடல் பாதுகாப்புத் தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது.

அசுர வேகத்தில் அபிவிருத்திகளை ஏற்படுத்தி மனிதனைத்தன்னிறைவுடன் வாழவைக்கவேண்டும்என்ற பேராசையில் நாடுகள் – குறிப்பாக வளர்முக நாடுகள் பாரிய திட்டங்களைத் தீட்டி செயற்படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதைப் பார்க்கின்றோம்.

இதில் நமது நாடும் விதிவிலக்கல்ல. துரிதப்படுத்தப்பட்ட மகாவலி திசை திருப்புத் திட்டம் இதில் ஒன்று.

இம்மாதிரித் திட்டங்களால் இயற்கையான சூழல் அதாவது காடுகள், நீரோட்டங்கள், குன்றுகள் போன்ற இயற்கை அமைப்புக்கள் அழிக்கப்பட்டும், மாற்றப்படும்வி( வதனால் மனிதனின் வாழ்க்கைமுறையும் மாறநேர்கின்றது. இந்த மாற்றம் நன்மையாகவும் இருக்கலாம், தீமையாகவும் அமையலாம்.

காடுகள் திட்டமின்றி அழிக்கப்படுவதனால் பருவ மழை பொய்ப்பதும், விவசாயம் பாதிக்கப்படுவதும், மின்சார உற்பத்தி தடைப்படுவதுமாக மனிதனின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுவருகின்றது. எனவேதான் பாரிய திட்டங்களை உருவாக்கும்போது மனிதனின் சுற்றுடல் பாதிப்புப் பற்றியும் தீவிரமாக ஆலோசிக்கப்படல் வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது.

இதற்கு அரசு தரப்பில் திட்டங்கள் தீட்டுபவர்கள் மாத்திரமல்ல, விஞ்ஞானிகள், விவசாய நிபுணர்கள், குறித்த பகுதிகளின் பருவநிலைகள் பற்றி அனுபவ ரீதியாக நன்கு பரிச்சயமுள்ள சாதாரண மனிதர்கள் போன்ற அனைவரது ஆலோசனைகளையும் ஒத்‌துழைப்பையும் நாடவேண்டும்.

வளர்ந்த நாடுகள் அணு ஆயுதப் பரீட்சைகளை நடத்தி ஆகாயத்திலும், கடலிலும் நஞ்சைக் கலந்து வருவது ஒருபுறமிருக்க, தமது பாரிய தொழிற்சாலைகளினாலும், யந்திரசாதனங்கள் போன்றவற்றினாலும் சூழல் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்கான வழிவகைகளையும் ஆராய்ந்து செயற்படுத்திக் கொள்கின்றன. இந்த நாடுகளின் வளர்ச்‌ ‌ ‌ாகம் கொள்ளும் வளர்முக நாடுகள் அங்கிருந்து கருவிகளையும், நாசம் விளைவிக்கும் ரசாயனங்களையும் திட்டமற்றவிதத்தில் கொள்முதல் செய்து தமது இயற்கைச் சூழல்களை நாசமாக்கிக் கொள்கின்றன.

இந்த மோகம் நம்நாட்டில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள அபிவிருத்திசபைகளுக்கும் ஏற்பட்டுவிடக் கூடாது என்று நாம் விரும்புகின்றோம்.

மத்திய அரசைப் பார்த்து ''காப்பி'' அடிப்பதை விடுத்து தமது பகுதிகளின் நிலைமைகளுக்கேற்ப திட்டங்களை தீட்டவேண்டும்.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையை அமைத்தவர்கள் அப்பொழுதே சூழல் பாதிக்கப்படுமா என்று சிந்தித்திருப்பார்களானால் தொழிற்சாலையின் தூசி படிவதனால் சுற்றியுள்ள விவசாய நிலங்கள்பாதிக்கப்படுவதை மாத்திரமல்ல அப்பகுதி மக்களுக்கு இதனால் ஏற்படும் நோய்களையும் தவிர்த்திருக்க முடியும்.

எனவேதான், அபிவிருத்தி எவ்வளவு அவசியமோ அதனை அனுபவிக்கப்போகும் மனிதனின் சுற்றுடலின் பாதுகாப்பும் மிக அவசியம் என்றவகையில் அபிவிருத்திக்குத் திட்டமிடுபவர்கள் சிந்திக்க வேண்டும் என வற்புறுத்துகின்றோம்.

## இன்று சூழல் பாதுகப்புதினம்

# பொருளாதார வளர்ச்சிக்கு சுற்றுடல் பாதுகாப்பின் அவசியம்

டபிள்யூ டி. ஜலப்பெருமா

கடந்த சில தசாப்தங்களாக வளர்முக நாடுகளின் சக்திகளும் முயற்சிகளும் அதிகரித்த அளவில் பொருளாதார அபிவிருத்தியை நோக்கி திருப்பிவிடப்பட்டுள்ளன. பெரும்பாலான நாடுகளில் உணவுஉற்பத்தியைவிட சனத்தொகை துரித கதியில் அதிகரித்து வருகின்றன. அதே சமயம் கோடிக்கணக்கான மக்கள் ஏழ்மை நிலையிலும் போஷாக்கின்மையாலும் வாடும் வேளையில் நாடுகள் இயற்கை வளங்களைத் தீர்த்து வருகின்றன. வளர்ந்துவரும் சனத்தொகைக்கு இயற்கை வளங்களின் உபயோகம் அதிகளவில் தேவைப்படுகிறது. அதே வேளையில் அபிவிருத்தியானது கணிசமான தொகை வளர்ச்சியில் செறிவுபடுத்தப்பட்டுள்ளது.

மொத்த உள்நாட்டு உற்பத்தியினால் மதிப்பிடப்படும் பாரம்பரிய வளர்ச்சி முறையில் அண்மைக்காலங்களில் அதிக அதிருப்தி காணப்பட்டது.

இந்தப் பாரம்பரிய கணிப்பு முறையில் பல வளர்முகநாடுகளின் பொருளாதார சாதனைகள் உத்தேச இலக்குகளுக்கு அண்மித்ததாக காணப்பட்டது. ஆனால் சிறந்தவாழ்விற்குப் பங்களிப்பினைச் செய்யும் பல துறைகளில் சிறிதளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

இதனால் கடந்த சிலவருடங்களாக அபிவிருத்தியின் முழுப் பயனும் அதிகபட்ச இயலளவும் வாழ்க்கைத் தரத்தினை சீர்திருத்திப் புவியின் வளங்களைச் சரியான முறையில் நிர்வகிக்க புதிய நோக்கு கடைப்பிடிக்கப்படுவதை அவதானிக்கக் கூடியதாக விருக்கிறது. அசுத்தமடைதல் சனத்தொகை வளர்ச்சி பொறுத்து இயற்கை மூள வளங்களை உபயோகித்தல் என்பன பற்றியே ஆரம்பக்கட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது. ஆனால் 1971ம் ஆண்டு போனெக்ஸ் கருத்தரங்கு 1972ம் ஆண்டு ஸ்டோக்ஹோமில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித சுற்றுடல் மாநாடு ஆகியன வற்றிற்குப் பின்னர் சுற்றுடல் ஒரு பரந்த கண்ணேட்டத்தில் அணுகப்பட்டது. சகல தேசிய முயற்சிகளுடனும் சம்பந்தப்பட்ட ஏதுவாக நோக்கப்பட்டது. சிறந்த வாழ்க்கைத்தரத்திற்கும் அபிவிருத்திச்செய்முறைக்கும் தொடர்புடையவிதத்தில் இதன் கவனம் திருப்பப்பட்டது.

### மூலவள உபயோகம்

2000ம் ஆண்டினை ஒரு உத்தேச சனத்தொகை வளர்ச்சி மூலவளத் தேவைகள் என்பனவற்றின் அடிப்படையில் நோக்கும் போது சகல வளர்முக நாடுகளினதும் தேசிய செயற்பாடு வாழ்க்கைத் தரத்தினை அபிவிருத்தி செய்வதாகவே அமையும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. இப் பிரயத்தனம் வேலைவாய்ப்புகள் சமூக தாபனங்கள் தொழில்நுட்பங்கள் எல்லாவற்றிலும் மேலாகமூலவளங்களின் விவேகமான உபயோகம் என்பனவற்றின் அடிப்படையில் தான் அமைந்துள்ளது. அபிவிருத்தி, சுற்றுடல் என்பனவற்றின் பிரச்சினைகள் ஒரே நேரத்தில் ஒன்றுக்கொன்று உதவவேண்டும் என்ற புதிய சிந்தனை வளர்ச்சியடைந்ததைத் தொடர்ந்து நாடுகள் சுற்றுடலுக்கும் அபிவிருத்திக்குமிடையே தமது தெரிவைச் செய்ய வேண்டியதில்லை. இதனை விடுத்து தாம் மேற்கொள்ளப்போகும் அபிவிருத்தியின் தரத்தினை அல்லது மாதிரியையே தெரிய வேண்டும் சுற்றுடல் பரந்தவெளியை வலுவை பொருட்க'ை வழங்குகிறது. அதே வேளை அசுத்தப் பொருட்களையும் தன்னகத்துள் ஈர்த்துக்கொள்கிறது. அபிவிருத்தியானது சுற்றுடலை தரம் குறைப்பதுடன் அதன் தரத்தையும் உணர்த்துகிறது. இது அபிவிருத்திக்கு தடங்களையும் வாய்ப்பையும் நல்குகிறது எனலாம். ஆதலால்

(5-ம் பக்கம் பார்க்க]

[சனத்தொகை வளர்ச்சியின் அழுத்தத்தினால் நெடுங்கால வளர்முக நாடுகள் அவற்றின் இயற்கை மூல வளத்தினை மிகையாக உபயோகித்துள்ளன. பொருளாதார வளர்ச்சி நீடிக்க வேண்டுமானால் சூழல் நிர்வாகத்தையும் மிகக்சவனமாக இணைந்து செயலாற்ற வேண்டியதில் எதுவித ஐயமுமில்லை. இத்தகைய முகாமைத்துவத்தின் தேவைகளை இலங்கையில் மத்திய சூழல் அதிகார சபையின் பொதுமுகாமையாளர் இங்கு ஆராய்கிறார்.

# நான்கு மதம்; ஒருசமயம் இரண்டு மொழி; ஒருகுரல்

பதுளை ஆயர் பேரருட்திரு. லியோ நாணயக்காரவின் மனிதாபிமானமும் அறநெறிச் செறிவும் 1980ல் கொழும்பில் நடந்த 'மனித உரிமைகள்' கருத்தரங்கில் கலந்துகொண்ட அறிஞர்கள் உள்ளத்தைக் கொள்ளைகொண்டன. அவருடைய மறைவுகேட்ட எமக்கு அது நாட்டுக்குப் பேரிழப்பு என்பதை உணர்த்துகின்றது.

நல்ல உருவம், சிறந்த அறிவு, தெளிந்த நம்பிக்கை–இம்மூன்றும் இப்பெரியாரில் காணப்பட்ட பண்புகள். வியக்கத்தக்க முறையில் சுருட்டு ஒன்று பிடித்துக்கொண்டு, தாம் தீட்டிய இளைஞர் அபிவிருத்திர்திட்டங்களையும் அவற்றின் குறைநிறைகளையும் மிக அமைதியான முறையில் அளவளாவுவதில் இன்பமடைவது மறைந்த ஆயரின் பொழுதுபோக்குப்போலிருந்தது.

பல ஆரவாரிப்புள்ள கருத்துவேறுபாடுகளும் மோதல்களும் கருத்தரங்கில் நிகழ்ந்தபோதெல்லாம் மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய திரு. எச். டபிள்யூ ஜெயவர்த்தன மௌனமாகவிருந்த ஆயரின் உள்ளக்கிடக்கையை அறிய பகிரங்க அழைப்பு விடுவார். இப்பெரியாரின் பொதுநல நோக்கின் மேம்பாட்டைப் புலப்படுத்தியது இது.

தமிழ் மக்கள் இந்துக்கள் ஒருமித்து வாழும் சமுதாயத்தின் பிரச்சினைகள் ஒருவிதம் சிங்கள மக்கள்–பௌத்த மதத்தினர் சமூகத்தின் பிரச்சினைகள் இன்னொருவிதம். இன்று நாட்டில் அமைதியின்மைக்குத் தூபமிடும் பிரச்சினைகள் ஆழமாகப் பார்க்கும்போது பொருளாதார ஏற்றத்தாழ்வில் அமைந்தவையே. அடித்தளத்தில் அவ்வாறிருக்க அதற்கு மேல், மொழி, இன, மத வேறுபாடுகள் அர்த்தமற்றமுறையில் தூபமிடுவதை மறைந்த ஆயர் திரு. லியோ நாணயக்கார நன்குணர்ந்து ஆற்றிய பணியே இன்று பதுளை கண்ட சோகக் காட்சி.

மதம் மனித வாழ்க்கையின் இலட்சியத்துக்கு ஒரு தெப்பம்போன்றதாயின் நாட்டில் பின்பற்றப்படும் எல்லா மதங்களும் ஒரு சமயமென்ற உறுதியான கொள்கையுடையவர்; இரு மொழிகளைப் பேசும் இந்நாட்டு மக்கள் ஒரே குரலில் பேசவேண்டுமென்று, அதற்குரிய நெறியில் வாழ்ந்து காட்டி சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் நம்பிக்கைகொண்ட நண்பர் பதுளை ஆயர் பேரருட்திரு. லியோ நாணயக்காரவைப்போன்ற ஞானிகள் இந்நாட்டில் ஒவ்வொரு மதத்திலும் இலைமறைகாய்போலில்லமலில்லை நாடு நல்வழிப்பட நான்கு மதத்தவர்களும், இரண்டு மொழி பேசும் இந்நாட்டு மக்களும் வேறுபாடுகளைக் குறைத்து சமயநெறிகளின் பொதுத்தத்துவத்தை வாழ்க்கையில் கடைப்பிடிப்பதே இத்தகைய ஞானிகளுக்கு நாம் அளிக்கும் அஞ்சலி.

வ.வே.சு.ஐயர்

# காந்திஜியைக்கலக்கிய துயரச் சம்பவம்

பற்றிமாகரன்

நேற்றைய தொடர்ச்சி]

இவ்வாறாக இலக்கிய துறை மூலம் மக்களை அறிவு மயப்படுத்தும் உணர்வுமயப் படித்தும் பணியை மேற்கொண்ட ஐயர் சொல்லேருழவனாகமட்டும் நிற்காது செயலேருழவனாகவும் மாறினார் 1920ம் ஆண்டுப் பொதுமன்னிப்பை அடுத்து சென்னை திரும்பிய ஐயர் தேசபக்தனின் உதவியாசிரியர் ஆகினார். இக்காலகட்டத்தில் அவர் ஒரு பழுத்த காந்தியவாதியாக முதிர்ச்சி கண்டிருந்தார். 1921ம் ஆண்டில் தேசபக்தனின் ஐயர் துணிவுடன் விடுதலை முழக்கமிட்டதன் விளைவாக பெல்லாரி மத்திய சிறைச்சாலைக்குள் அந்நிய ஆட்சியாளரால் தள்ளப்பட்டார். சிறையிலும் எழுதி எழுதியே நேரத்தைக் கழித்த ஐயர் 1922ல் விடுதலைஅடைந்து திருநெல்வேலியிலே சேரமா தேவி தமிழ்க் குருகுலத்தை ஸ்தாபித்தார். இக்குருகுலத்தின் வெளியீடாக ஐயர் ''பாலபாரதி'' என்னும் ஏட்டை நடாத்தினார். குருகுலத்தின் மூலம் மாளிடம் பயனுறக்கூய பல நல்லசெயல்களை அவர் செய்துவருகையில்

1925 ஆனி 3ம் நாள் தாம்பர பரணி நதியினிலே தன் குருகுல மாணவர்களை சுற்றுலாக்கூட்டிச் செல்கையில் அவரின் அருமைமகள் சுபத்திரா ஆற்றிலே தவறிவிழுந்தாள். உயிருக்குத்துடித்த தன் ஆருயிர் மகளைக் காப்பாற்றத் தந்தையும் நதியுள் பாய்ந்தார்.

(8ம் பக்கம் பார்க்க)

(இன்று மாவை கொல்லங்கலட்டி ஸ்ரீவீரகத்தி விநாயகர் தேர்த்திருவிழா)

## வினைதீர்க்கும் விநாயகன்

இறைவன் இறைவி வலம்வந்தே
இனிய பாவின் கனிபெற்றேன்
நிறைகொள் ஞான நெறிநாடும்
நேசர்க் கென்றும் கனியாவான்
மறைகள் யாவும் தொழநிற்கும்
மலராம் இனிய பதம்கொண்டோன்
குறைகள் நீக்கும் மாவைதிகழ்
கொல் லங் கலட்டிப் பெருமானே
நல்லோர் செய்த நூலனைத்தும்
நாடி நாடிப் போற்றல் செய்யும்
எல்லாம் வல்ல விநாயகரின்
எழிலார் தேரின் உலாக்காணின்
பொல்லா வினைகள் போய்த் தொலையும்
புனித சுகங்கள் வந்தெய்தும்
நல்லோர் உள்ளம் விழைகின்ற
நலன்கள் யாவும் சிறந்தோங்கும்.

'இளங்கோ'

# "தாயகம் திரும்புவோரில் 90 வீதமானோர் தமிழ்நாட்டில் குடியமர்த்தப்படுவதில்லை

## மலையக மக்களின் அறியாமை நீக்க முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை"

[வவனியா]

"இந்தியா என்றாலே தமிழ் நாடு என்றும், அனைவருமே தமிழர்கள் என்றும், அதனால் இந்தியாவுக்குப் போனால் பிறமொழி மக்களோடு போராட வேண்டிய தொல்லையின்றித் தமிழர்களோடு தமிழர்களாக வாழலாம் என்று ஈழத்து மலையகத் தமிழர்கள் நம்பிக்கொண்டிருக்கின்றனர். இந்தியாவிலுள்ள 24 மாநிலங்களில் ஒன்றுதான் தமிழ்நாடு என்பதும், மீதி 23 மாநிலங்களும் மாறுபட்ட மொழி, கலாசாரங்களைக் கொண்டவை என்பதும் இலங்கையிலிருந்து அகதிகளாகத் தாயகம் திரும்பும் தமிழர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு வீதமும் வேற்றுமாகாணங்களிலேயே குடியேற்றப்படுகிறார்கள் என்பதும் இந்த மக்களுக்குத் தெரியாது."

களப்பு, அம்பாறை, கண்டி பதுளை, யாழ்ப்பாணம் முதலான இடங்களுக்கு விஜயம் செய்து வவனியாவுக்கு வந்த இவர்கள் இங்குள்ள 18 குடியேற்றங்களைப் பார்வையிட்டனர். இங்குள்ள காடுகள் அழிக்கப்பட்டு மலையக மக்கள் இங்கு சிறப்பாக வாழ்வதாகவும் உண்மையான நிர்மாணத் திட்டங்களை இங்கு காணக்கூடியதாயுள்ளதாயும் அவர்கள் தெரிவித்தனர்.

கலாநிதி அரு. கோபாலன் என்னிடம் கூறியதாவது:

"கடந்த மாதம் 3ம் திகதி இலங்கை வந்த நாம் திருகோணமலை, மட்டக்களப்புப் போன்ற இடங்களுக்கும் சென்று இதுபோன்ற குடியேற்றங்களைப் பார்வையிட்டோம். அங்கும் இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டுக் குடிபெயர்ந்த மக்கள் வளத்தோடு

**தகவல்; கலாநிதி அரு.கோபாலன்**
**சந்திப்பு: நமது வவனியா நிருபர்**

இலங்கைவாழ் தமிழரின் இன்றைய நிலைபற்றி நேரில் கண்டறிந்து கொள்ளுமுகமாக இலங்கை வந்த தமிழக அறிஞர்கள் மூவரில் ஒருவரான ஈழ-தமிழக ஒருங்கிணைப்புச் செயலாளர் கலாநிதி அரு. கோபாலன் மலையகத் தமிழ் மக்கள்பற்றி என்னிடம் குறிப்பிட்டார். தமிழக அறிஞர் மூவரும் திருமலை, மட்டக்

வாழ்வது கண்கூடாகத் தெரிகின்றது.

"அதன்பிறகு மலையகத்தில் மூன்று நாட்கள் சுற்றுப்பயணம் செய்து ஹட்டன், பதுளை, பண்டாரவளை, நுவரேலியா போன்ற இடங்களில் நகரிலும், தோட்டப்பகுதிகளிலும் மலையகத் தமிழர்களை நேரடியாகச் சந்தித்தோம்.

நாங்கள்சந்தித்த சாமானியமக்களிடம் இந்தியாவைபொறுத்தவரை ஓர் அறியாமை குடிகொண்டிருப்பதைக் கண்டோம்.

இந்தியா என்றால் தமிழ்நாடுதான் என்று நம்பி அங்கு வந்த அகதித் தமிழர்கள் அங்கும் மாறுபட்ட மக்கள் மத்தியில் தான் வாழவேண்டியகட்டாயமிருப்பதால் அங்கும்தாக்குப் பிடிக்கமுடியாமல் முன்பு இந்தியாவுக்கு வந்தவர்கள் திரும்பவும் தமிழ்நாட்டுக்கு ஓடிவந்து தங்களைத் தமிழ் நாட்டில் குடியேற்றும்படி கோரி போராடுவதும், அது மத்திய அரசின் விவகாரம்; தாங்கள் செய்வதற்கு ஒன்றுமில்லை என்று தமிழக அதிகாரிகள் கைவிரிப்பதும், அதனால் அந்த மக்கள் வேதனைக்கும், சோதனைக்கும் ஆளாகி அல்லலுறுகின்றனர். இதனைக் கருத்திற்கொண்டு இங்குள்ள இந்தியவம்சாவளியினர் அங்கு வருவதைவிட்டு இங்கேயே தாக்குப்பிடித்து வாழவேண்டும் அல்லதுதமிழ்ப்பிரதேசங்களான வடக்குக் கிழக்கு மாநிலங்களில் குடியேறவேண்டும். மலையக மக்களுக்குஇதனை நாங்கள் எடுத்துச் சொன்ன போது பலர் அதனை ஏற்றுக் கொண்டனர். இதிலிருந்து எங்களுக்குத் தெரிவது மலையக மக்கள் மத்தியில் உள்ள அறியாமையைப்போக்க எந்தத் தரப்பிலிருந்தும் எதுவித முயற்சிகளையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதுதான்.

அட்டனில் மலையக மக்களில் பல்வேறு தலைவர்களையும் ஸ்தாபனப்பிரதிநிதிகளையும் நாம் சந்தித்து உரையாடிய போது, நாங்கள் சொன்னதைச் செவிமடுத்த அவர்கள் இந்த அரசு அகதிகளாக ஏற்றுக்கொள்வதை நிறுத்தும் வரை இவர்கள்குடியேறுவதை நிறுத்த முடியாதென்று தெரிவித்தனர்.

**கேள்வி:** இலங்கை இந்திய வம்சாவளி பற்றி தமிழகத்தல் உருவாகிவரும் பொதுக்கருத்து என்ன?

"இன்று தமிழ்நாட்டில் ஏற்பட்டுவரும் பொதுக்கருத்து 1981ம் ஆண்டு காலாவதியாகும் சாஸ்திரி-சிறிமா ஒப்பந்தத்தை அப்படியே விட்டு இனிமேல் புதுப்பிக்கக்கூடாது இனிமேல் இலங்கையிலிருந்து அகதிகளாக ஏற்றுக்கொள்வது பற்றி எவ்வித ஒப்பந்தமும் செய்யக்கூடாது என்பதாகும்.

இலங்கையிலிருந்து குடிபெயர்ந்த மக்களுக்கு எல்லா உதவிகளையும் செய்து தமிழ் நாட்டிலேயே அவர்களைக் குடியமர்த்தவேண்டும் அல்லது அவர்கள் அனைவரையும் ஒட்டுமொத்தமாக அந்தமான் போன்ற தீவுகளில் குடியேற்றி சேர்ந்து வாழவழிசெய்யவேண்டும் இதையொட்டி வெகுசன இயக்கங்களும் அங்கேநடத்தப்பட்டு வருகின்றன.

### அம்பாறையில் தமிழரும் முஸ்லிம்களும்

**கேள்வி:-** அம்பாறை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தபோது அங்கு நீங்கள் கண்டவற்றையும், கேட்டவற்றையும் கூறுவீர்களா?

"அம்பாறை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தபோது பல இஸ்லாமிய இளைஞர்களைச் சந்தித்தபோது தமிழ்நாட்டில் இல்லாத ஒரு முரண்பாடு இலங்கையில் மட்டும் இருப்பதை அவதானிக்கமுடிந்தது.

"தமிழ்நாட்டில் 20 சதவீதத்துக்கு மேல் முஸ்லீம்கள் இருந்தும், அவர்களின் சரிபாதிப் பகுதியினர் உருது மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிருந்து, தமிழர் என்றும் முஸ்லிம் என்றும் வேற்றுமையில்லாது தமிழர்களோடு தமிழர்களாக இன உரிமைப் போராட்டங்களில் கலந்துகொண்டு வாழுகின்றபோது இங்கு மட்டும் முஸ்லிம்-தமிழர் என்ற பாகுபாடு இருப்பதும் அவர்கள் பிரிந்து நிற்பதும் எங்களுக்குப் புதிராகவே தெரிகின்றது. இதை மாற்றி இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய தமிழ் பேசும் மக்

## தேர்தல் ஒன்றே பேதங்களுக்குக் காரணமாம்

கள் அனைவரும் ஒன்றுபட்டு உரிமைகளை வென்றெடுக்கப் போராடவேண்டும் என்பதே தமிழகத்திலுள்ளஇஸ்லாமியர்களின் எதிர்பார்ப்பு ஆகும் என்று நாம்கூறியபோது, அவர்களும் ஏற்றுக்கொண்டனர்.

"தேர்தல் ஒன்றுதான் தங்களைப் பிரித்து வைப்பதாகவும் மேலும் பேதங்கள் பழைய தலைமுறையோடு மறைந்து வருவதாகவும் இளைஞர்கள் மத்தியில் இணைந்து செயல் ஆற்றுகின்றஎண்ணம்வளர்ந்து வருவதாகவும், ஆனால் வடக்கில் உள்ள தமிழ்த் தலைமை தமது இயக்கத்தை இஸ்லாமிய மக்கள் மத்தியில் அடிமட்டத்திலிருந்து கட்டி அமைக்க முயலாதிருப்பதுதான் குறை என்றும் சொன்னார்கள்.

**கேள்வி:-** தமிழ்த் தலைமையினைச் சந்தித்தீர்களா?

"ஆம். எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தையும், கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரத்தையும் கொழும்பில் சந்தித்துப் பேசினோம். இயக்க ஒற்றுமையின் முக்கியம் பற்றி அவர்கள் எடுத்து விளக்கினர்.

**கேள்வி:** தமிழகத்தில் கைதான ஈழத்துத் தீவிரவாத இளைஞர்களை இலங்கை அரசிடம் ஒப்படைப்பதுபற்றி என்ன கருதுகின்றீர்கள்?

தமிழகத்தின் எல்லாத் தலைவர்களுமே அந்த இளைஞர்களை இலங்கை அரசிடம் கையளிக்க விரும்பவில்லை அந்த வகையில் அவர்களுக்கு வழக்கு அங்கேயே முடிக்கப்பட்டு தண்டனையோ விடுதலையோ அளிக்கப்படுவதை விரும்புகின்றோம் அதுமட்டுமின்றி அந்த இளைஞர்களுக்கு இந்தியாவிலேயே அரசியல் புகலிடம் அளிக்க வேண்டும் அல்லது இலங்கை தவிர்ந்த அவர்கள் விரும்புகின்ற எந்த நாட்டுக்கேனும் அவர்கள் பாதுகாப்புடன் செல்ல அனுமதிக்கவேண்டும். இதுதான் தமிழ்நாட்டினுடைய மொத்த கருத்தாகும். இந்தக்கருத்தை மேலும் வலியுறுத்தி இயக்கங்களை நடத்த முயற்சி மேற்கொள்வோம்.

(அ)

# பொருளாதார...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

சாத்தியமான அபிவிருத்தி தற்போதைய எதிர்கால சந்ததியினர்களின் தேவைகளை மனதில் கொண்டும் மேற்கொண்டு செயல்படவுள்ள அபிவிருத்தியை சுற்றாடலின் இயலளவு பாதிப்படையாத முறையிலும் செய்ய வேண்டும். இந்நோக்கம் ஈடேற பல தாபனங்களின் ஒத்துழைப்பு அவசியம். கொள்கை மேற்கொள்வதில் ஒன்றிணைந்த அனுகுமுறையும் பல்வேறு துறைகளின் பங்களிப்பும் அவசியம் அபிவிருத்தித் திட்டங்கள் சூழலில் எவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதற்கும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு வளங்களை ஒதுக்குவது சம்பந்தமான ஒழுங்குகளும் முறைகளும் பரிசீலனை செய்யப்பட வேண்டிய செய்முறைகளை உருவாக்குவது அவசியம்.

### வளர்முக நாடுகளின் நெருக்கடி

வளர்முக நாடுகளின் சூழல் மூலவளங்கள் மிகப் பிரமாண்டமான நெருக்கடியை எதிர் நோக்குகின்றன. இந்த மூல வளங்களின் விளைதிறனில் தான் பெரும்பான்மையான ஏழைமக்கள் சுகாதாரப், போஷாக்கு, பொது சுகவாழ்வு என்பன நேரடியாக தங்கியுள்ளது தங்குதடையற்ற அபிவிருத்திக்கு நீண்டகாலத்திற்கு இவற்றை செவ்வையாக நிர்வகிக்கும் திறன் வெகு அவசியமாகும். நெடுங்காலமாக வளர்முகநாடுகள் சூழலை முக்கியமாக கருத்தில் எடுத்துக் கொள்ளவில்லை.

சூழல் தாக்கத்திற்கு உருவாக்கப்படும் திட்டங்களின் அளவுகோல் கொள்கையளவில் வளங்களை உபயோகிப்பதால்பெறுவதைவிடகூடியதாக (சூழல் மனரீதியான நன்மைகள் உட்பட) விளங்கவேண்டும். ஒரு திட்டத்தின் சூழல் தாக்குதலை மதிப்பீடு செய்யும் போது சூழலின் ஆரம்பகால நிலை எதிர்கால சூழல் கணிப்பு பிரஸ்தாப திட்டத்துடனும் அத்திட்டம்இல்லாத நிலையுடனும் அவற்றினால் ஏற்படும் தாக்கங்கள் என்பனவற்றையெல்லாம் கணக்கிலெடுக்க வேண்டும். சூழல் தாக்க மதிப்பீட்டிற்கு பல நுட்பங்கள் காணப்படுகின்றன. இருப்பினும் வளர்முக நாடுகளில் சூழல் தரவுகள் சூழல் பாதிப்புகள் பற்றிய அறிவுவெகு குறைவாக இருப்பதால் மேற்குறிப்பிட்ட நுட்ப முறைகளால் மதிப்பீட்டினை மேற்கொள்வது சிரமம்.

பாரிய அபிவிருத்தித் திட்டங்களைப் பொறுத்தவரையில் இயற்கை, மனித வளங்களை விருத்தி செய்வதே சூழல் மதிப்பீட்டின் பிரதான குறிக்கோளாக விளங்கவேண்டும். ஆதலால் அபிவிருத்தித்திட்டமொன்றினால்இயற்கை, மனித சூழலுக்கு ஏற்படும் நன்மைகளும் தீமைகளும்இனம் காணப்பட்டு மதிப்பீடு செய்யப்பட வேண்டும். தீமைகளை குறைக்கக் கூடிய நடவடிக்கைகளையும் நன்மைகளை அதிகரிக்கக் கூடிய செய்கைகள் பற்றியும் ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும். திட்டத்தினால் பாதிக்கப்படும் சூழல் மூல வளங்களை செயல்ரீதியில் நிர்வகிக்கக்கூடிய வகையில் வழங்கும் ஆலோசனைகளுக்கு குறிப்பாக கவனம் செலுத்தப் படவேண்டும்.

தங்குதடையற்ற வளர்ச்சிக்கு அபிவிருத்தியும் சூழலும் ஒன்றுக்கொன்று அனுசரணையாக விளங்கவேண்டுமென்பது சர்ச்சைக்கு அப்பாற்பட்டது. எமது வாழ்நாளில் எமக்கு சேவையாற்ற எதிர்கால சந்ததியினரிடமிருந்து இரவல் பெற்ற இயற்கை மூலவளங்களின் தரத்தையும் சூழலையும் சூழலுக்கு நாம் இப்பொழுது கொடுக்கும் கவனத்தில் தான் தங்கியிருக்கிறது எனலாம்.

## மூத்த நயினர் வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்த நயினர் கோவில் வருடாந்த உற்சவம் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெறும் உற்சவங்கள் இம்மாதம் 22ம் திகதி திருக்கல்யாண உற்சவத்துடன் நிறைவுபெறும். வண்.நிரு)





M-50 வெற்றுப் போத்தல்களை எறியாதீர்கள். அவற்றின் மூடிகளின் உட்புறத்தே தங்க நிற வட்டம் இருக்கிறதா எனப் பாருங்கள். அப்படிக் கிடைக்கப் பெற்றால் நீங்கள் அதிர்ஷ்ட சாலிகள்!

அத் தங்கநிற வட்டத்தையும் அது இருந்த லேபலுடன் கூடிய அதே போத்தலையும் உங்களுக்கருகில் உள்ள லங்கெம் விற்பனையாளரிடமோ அல்லது லங்கெம் கிளையிலோ கொடுத்து உங்களுக்குரிய தங்கப் பவுணைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**LANKEM**

760-762, பேஸ்லைன் வீதி,
கொழும்பு 9.

400மி.லீ. ரூ.36/-

உத்தரவுப்பத்திர இல. S/314

Grant K & E 4476

விமலராசாவைச் சிறையில் வைத்திருப்பது

# மனிதாபிமான ஜனநாயக உரிமைகளை குழிதோண்டிப் புதைக்கும்செயல்

## விசாரணை இன்றேல் விடுதலைஎன்றும் கோருகிறது இல. தேசிய மாணவர் சங்கம்

(கொழும்பு)

யாழ்ப்பாணப பல்கலைக்கழக மாணவன் விமலராசா குற்றம் எதுவும் சுமத்தப்படாமல் நீண்டகாலமாக பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதை ஒரு மிலேச்ச செயலாகவும் மனிதாபிமான ஜனநாயக உரிமைகளை குழிதோண்டிப் புதைக்கும் நடவடிக்கையாகவும் கருதுகிறோம். எனவே அரசு விமலராசாவை உடன் விடுதலை செய்யவேண்டும்.

இவ்வாறு சர்வதேசிய மாணவர் சங்கத்துடன் இணைக்கப்பட்ட இலங்கை தேசியமாணவர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக மேற்படி சங்கம் விடுத்துள்ள அறிக்கையின் விபரம் வருமாறு:

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் மூன்றும் வருட மாணவரான அ. விமலராஜா 21-04-1981-ல் எவ்வித நியாயபூர்வமான குற்றச்சாட்டு மின்றி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு ஒரு வருடத்திற்கு அதிகமான காலம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். இது சம்பந்தமாக யாழ், பல்கலைக்கழக மாணவர் அவை தொடர்ந்து பல் வேறுவிதமான கோரிக்கைகளை முன்வைத்தும், அமைதியாகவும் தமது எதிர்ப்பை தெரிவித்ததுடன், தற்போது நீண்டதொரு வகுப்புப் பகிஷ்காரப் போராட்டத்தையும் நடத்தி தமது எதிர்ப்பை உக்கிரப்படுத்தியுள்ளது.

★ விமலராஜாவின் மீது குற்றம் காணின் அவரை நீதிமன்றத்தில் தோற்ற நடவடிக்கை எடுக்குமாறும்,

★ தொய்வு வியாதியஸ்தரான விமலராஜாவை ஒரு வைத்தியரின் மூலமாகப் பரீட்சித்து வைத்திய அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறும்.

★ அவர்தோற்றவுள்ள கல்வி தொடர்பான பரீட்சையில் தோற்ற அவசிய நடவடிக்கைகளை எடுக்குமாறும்.

★ பெற்றோர்களுக்கும், நெருங்கிய உறவினர்களுக்கும் அவரைச் சந்திக்க இடமளிக்குமாறும் யாழ். பல்கலைக்கழக நிர்வாகஸ்தர்களை வேண்டிக் கொள்கிறோம்.

ஏனைய பல்கலைக்கழக மாணவர்களும் இது தொடர்பாக பல்வேறு மட்டங்களிலான எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தி விமலராஜாவை விடுவிக்குமாறு கோரிவருகின்றனர்.

எவ்வித விசாரணையுமின்றி மாணவர் ஒருவரை இராணுவத் தடுப்புக் காவலில் வைத்திருப்பது மாணவர் இயக்கத்தையே அழித்தொழிக்க அரசு கங்கணம் கட்டியுள்ளதாக நாம் சந்தேகிக்கிறோம். அநியாயமாக ஆண்டுக்கணக்கில் மாணவரொருவரை பயங்கரவாத தடுப்பு காவலில் வைத்திருக்கும் முயற்சியை கடுமையாகக் கண்டிக்கிறோம். தார்மீகம், ஜனநாயகம் பற்றிக் கூச்சல் போடும் ஆட்சியினர் எதிர்கால அறிவார்ந்த பாரம்பரியத்தினரை பயமுறுத்தும், பொருட்டும், சுதந்திரகருத்துத் தெரிவிப்பதை கட்டுப்படுத்தும் பொருட்டும் ஓராண்டுக்கு அதிகமாக மாணவர் ஒருவரை இராணுவத் தடுப்புக்காவலில் வைத்திருக்கும் அரசின் நடவடிக்கையை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

விமலராஜாவை விடுதலை செய்யுமாறு அரசைக் கோருகின்றது. (இ

### தடைஉத்தரவு

[சென்னை]

நேற்றிலிருந்து 7 நாட்களுக்கு சென்னையில் ஊர்வலங்களுக்கு தடை உத்தரவை சென்னை நகர பொலிஸ் கமிஷனர் பிறப்பித்துள்ளார். சில தொழிற்சங்கங்கள் எடுத்து வரும் நடவடிக்கையைத் தொடர்ந்தே இத்தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (கு)

### தற்கொலை

(பண்டத்தரிப்பு)

நான்கு பெண்பிள்ளைகளின் தந்தை ஒருவர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

பெரியவிளான் என்னுமிடத்தைச் சேர்ந்த தச்சுத்தொழிலாளியான நாகலிங்கம் துரைராசா என்னும் 3? வயது நபரே இவ்வாறு நஞ்சருந்தித் தன் உயிரை மாய்த்துக்கொண்டவராவர்.

இவரது மரணவிசாரணை பண்டத்தரிப்பு பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி டாக்டர் அல்போன்சஸ் அத்தனுசியார் முன்னிலையில் நடைபெற்றது.

காலமானவரின் மனைவி, சிறிய தந்தையான நடராசா ஆகியோர் சாட்சியமளித்ததை தொடர்ந்து மரணவிசாரணை அதிகாரி தற்கொலை என்று தீர்ப்பு வழங்கினர். (க)

# தாயாரின் பிரிவைத் தாங்காது மகன் நஞ்சருந்தி தற்கொலை

(பண்டத்தரிப்பு)

தமது தாயார்புற்று நோயினல் இறந்ததினல் மனமுடைந்த வாலிபர் ஒருவர் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்து கொண்ட பரிதாப சம்பவம் மாதகலில் நிகழ்ந்துள்ளது.

மாதகல் வில்வளை என்னுமிடத்தைச் சேர்ந்த மார்க்கண்டு இராசரத்தினம் என்னும் 22 வயதுடைய வாலிபரே இவ்வாறு தன்னுயிரை மாய்த்துக் கொண்டவராவர்.

இவரது மரணவிசாரணை திடீர் மரண விசாரணை அதிகாரி டாக்டர் அல்போன்சஸ் அத்தனுசியார் முன்னிலையில் நடைபெற்றது.

காலம் சென்றவரின் தாயார் ஒருவருடத்திற்கு முன்பு புற்றுநோயினல் பீடிக்கப்பட்டு இறந்துவிட்டதாகவும் இதையிட்டு அவர் மிகவும் கவலையடைந்திருந்தார் என்றும் தாயார் இறந்தபின்பு தான் உயிர் வாழ்வதில் என்ன பிரயோசனம்? என்று அடிக்கடி கூறி அவர் கவலைப்பட்டு வந்தார் என்றும், சம்பவ தினத்தன்று தோட்டத்திற்குச் சென்று அங்கு மிளகாய்ச்செடிகளுக்கு தெளிப்பதற்காக வாங்கி வைக்கப்பட்டிருந்த கிருமிநாசினிப் போத்தலை எடுத்து அருந்திவிட்டதாகவும் மரண விசாரணையின் போது சாட்சிகள் மூலம் தெரிவிக்கப்பட்டது.

விசாரணை முடிவில் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்டார் என்று மரண விசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினர். (ச)

அல்லாரை கொலை வழக்கு:

# மகனை சுட்டதுபோல் கணவனையும் சுடப்போவதாக எதிரிகள் கூறினர்

## இறந்தவரின் மனைவி சாட்சியம்

(சாவகச்சேரி)

சம்பவதினம்பிற்பகல் 3மணி வரைநானும் எனது மகளும் வீட்டுமுற்றத்தில் இருந்தோம். எதிரிகளாகிய சந்திரன் இராசதுரை எங்கள் ஒழுங்கையில் போகும் போது எடியே உனது மகனைச் சுட்டது போல் உனது கணவனையும் தொலைத்துக்கட்டுகிறோம் பார் என்றனர்''

அல்லாரைக் கொலை வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது காலமானவரின் மனைவி பொன்னம்மா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்வழக்கில் 81 ஏப்ரல் 28ல் அல்லாரையைச் சேர்ந்த வல்லி சுப்பன் என்பவரை அவரது உறவினரான சின்னவன் பூபாலசிங்கம் அல்லது இராசதுரை சின்னவன் சந்திரன் ஆகிய இருவரும் பாளைக்கத்தியால் வெட்டிக்கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப் பட்டிருந்தது.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். தம்பிரத்தினம், சட்டத்தரணி செ. அம்பிகைபாலன் அனுசரணையுடனும், 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி செ. அம்பிகைபாலனும் முறைப்பாட்டுக்காரர் சார்பில் சட்டத்தரணி சி. பாலகிருஷ்ணர் பொலிஸ் சார்ஜன்ட் வி. செல்லையாவின் உதவியுடனும் ஆஜராகினர்.

காலமான வல்லி சுப்பனின் மனைவி பொன்னம்மா தொடர்ந்து சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டதாவது:-

எனது மகன் 4, 5 வருடங்களுக்கு முன் சுடுபட்டு இறந்தவர். நாங்கள் முற்றத்திலிருக்கும் போது இவ் விரண்டு பேர் இரண்டு சைக்கிளில் எங்கள் தெருவால் போனுர்கள். முதற்போன சைக்கிளில் இராசதுரை சந்திரன் என்பவர்கள் போனுர்கள். அவர்கள் கழுத்தை உயர்த்தி ''எடியே உனது மகனைச் சுட்டது போல உனது புருஷனையும் தொலைக்கிறோம் பார்'' என்றனர். அப்பொழுது எனது புருஷன் விறுந்தையில் நித்திரை செய்து கொண்டிருந்தார்- அவர் நித்திரையால் எழும்பியதும் எதிரிகள்கூறியதைநான் அவருக்கு கூறவில்லை. சற்றுநேரத்தில்சிவலுக்குப் போகும் போது கண்டேன் பின் அவரை உயிரோடு காணவில்லை. பிணமாகக் கண்டேன்.

அன்று இரவு எட்டரை மணி வரை முத்தர் மகன் இரத்தினம் வந்து உனது கணவர் கார்த்திகேசு வீட்டுமுற்றத்தில் வெட்டி போட்டுக் கிடக்கிறுர் என்றுர். உடனே நாங்கள் கார்த்திகேசு வீட்டுக்கு ஓடினேம். அங்கே அறிவு நினைவின்றிப் பிணமாமக் கிடந்தார்,

அதன் பிறகுதான் அவர்கள் தெருவால் போகும்போது கூறியது நினைவிற்கு வந்தது. அடிக்கடி இவர்கள் கதைவழிப் படுகிறபடியால் நான் அதைப் பொருட்படுத்தவில்லை. நீண்டகாலமாக எதிரிகளுக்கும் எங்களுக்கும் தொடர்பில்லை. சின்னவனும் சுப்பனும் ஒன்றைவிட்ட சகோதரர். எதிரிகளின் தாய் எனது ஒன்றைவிட்ட சகோதரி. எனது கணவன் புறப்படும்போது சாரமும் துணியும் அணிந்திருந்தார்.

நீதிபதி விசாரணையை ஜூன் 30ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

### அத்துமீறிய பிரி. குண்டுவீச்சு விமானம்

லண்டன், ஜூன். 4

பிரிட்டிஷ் குண்டுவீச்சு விமானம் ஒன்று பிரான்ஸில் வலுக்கட்டாயமாக தரை இறக்கப்பட்டுள்ளது.

இந்த விமானம் பிரான்ஸ் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்தபோது தரையிறக்கப்பட்டதாக பிரான்ஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வான்வெளியில் எரிபொருள் ஏற்றும் வேளையில் ஏற்பட்ட சிக்களினுல் எல்லையைதாண்டிப் போக நேரிட்டதாக பிரிட்டிஷ் விமானிகள் தெரிவித்துள்ளனர்.

விமானத்திலுள்ள ஆயுதங்கள் அப்புறப்படுத்தப்பட்டதின் பின்னரே அங்கிருந்து புறப்பட்டுச் செல்ல அனுமதிக்கப்படும் என்று பிரான்சில் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

### சின்னக்கடை நவீனசந்தை

[யாழ்ப்பாணம்]

சின்னக்கடையில் 14 லட்சம் ரூபா செலவில் அமையவுள்ள இருமாடி நவீன சந்தைக் கட்டிடத்திற்கான அடிக்கல்லை திங்கட்கிழமை மாலை யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் நாட்டிவைப்பார்.

மும்மத அனுஷ்டானங்களுடன் இடம் பெறவுள்ள மேற்படி அடிக்கல் நாட்டும் வைபவத்திற்கு யாழ் மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் தலைமைவகிப்பார். (கி)

உங்கள் வீட்டிற்குத் தேவையான
பாவனைப்பொருட்களை
தவணைமுறையில்
சுலபமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

★ தொலைக்காட்சி (T. V.) பெட்டிகள்
★ மின் விசிறிகள்
★ நீர் இறைக்கும் இயந்திரங்கள்
★ துவிச்சக்கர வண்டிகள்

மற்றும் உங்களுக்குத் தேவையான பொருட்கள்!

மங்கள வைபவங்கள்
வீடியோ படப்பிடிப்புச் செய்துகொடுக்கப்படும்

தொடர்புகொள்ளவும்:
முகாமையாளர்
TFC
த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்,
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7680

வெஸ்லி
மானிப்பாய்
தினசரி 6-15, 9-15
ஆயிரம்
ஜென்மங்கள்


## சிவகுமாரன் நினைவுதினம்

(யாழ்ப்பாணம்)

சிவகுமாரன் நினைவுதினக் கூட்டம் இன்று மாலை நல்லூர் கல்யாண மண்டபத்தில் நடைபெறும்.

தமிழீழ விடுதலை அணி தலைவர் டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் திருவாளர்கள் கோவை மகேசன், ஈழவேந்தன், செந்தூர்ராசா, பொன் பூலோகசிங்கம், கு. இராசநாயகம் ஆகியோர் உரையாற்றுவார்கள்.


ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி
தங்கைக்காக
(புதிய பிரதி)



றீகல் (யாழ்நகர்)
தினசரி 5 காட்சிகள்
BRAVE BUNCH
(Color)
11-6-82 முதல் ஸ்ரீதரின்:
மோகனப் புன்னகை



ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 4-30, 7-00, 9-30
சனி, ஞாயிறு 2-30க்கும்
LOVE BUG
From - 14-6-82
THE OTHER SIDE OF MIDNIGHT



வின்ஸர் (யாழ்ப்பாணம்) 6-6-82 வரை
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-பத்மினி-தங்கவேலு-எம். என். ராஜம்
தெய்வப்பிறவி (புதிய பிரதி)



வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
லொறி ட்ரைவர் ராஜாக்கண்ணு

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்
ராஜபார்வை



ராணி (யாழ். நகர்)
தினசரி 5 காட்சிகள்
Walt Disney's
Cat From The Outer Space



மனோகரா (யாழ்ப்பாணம்)
வெற்றி முரசுகொட்டும்
4-வது வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
மாதர்கள் கூட்டம் அலைமோதுகிறது
★ கார்த்திக் ★ ராதா
தியாகராஜன் நடித்த
அலைகள் ஓய்வதில்லை
(கலர்)



ராஜா [யாழ்ப்பாணம்]
தினசரி 4காட்சிகள்
தொடர்ந்து ''ஹவுஸ்புல்'' காட்சிகளாக
★ ரஜனிகாந் ★ சுஜாதா ★ விஜயன்
★ கராத்தே மணி ★ ரதி
அன்புக்கு நான் அடிமை
[ஈஸ்மன் கலர்]



சாந்தி (யாழ்நகர்)
10-30, 2-30, 6-15, 9-45
3-வது வெற்றி வாரம்

கமல் (இரட்டைவேடம்)
சுஜாதா, அம்பிகா, சுவப்னா, தேங்காய், தங்கவேலு, நாகேஷ்.
கடல் மீன்கள்
—கலர்—


### 410 நாட்களாக தடுப்புக்காவலில் இருக்கும்

# அருணகிரிநாதனைவிசாரணை அல்லது விடுதலை செய்க

## அ. இ. அ.த.தொ. சே. சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பு படையினரால் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ம் திகதி கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் யாழ். தபால் நிலைய ஊழியர் திரு. சிவசுப்பிரமணியம் அருணகிரிநாதனை விசாரணை செய்யவேண்டும் அல்லது விடுதலை செய்யவேண்டும்.

இவ்வாறு அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் ஒன்றை அகில இலங்கை அஞ்சல் தந்தித் தொடர்புகள் சேவையாளர் சங்கம் நிறைவேற்றியுள்ளது.

இத்தீர்மானத்தின் விபரம் வருமாறு

''எமது சங்க உறுப்பினரும் யாழ். தபால் நிலையத்தில் தபால் ஊழியராகக் கடமையாற்றியவருமான திரு. சிவசுப்பிரமணியம் அருணகிரிநாதன் 1981ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ம் திகதி பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டு ஓராண்டுக்கு மேலாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். ஆனல் இவருக்கு எதிராக இன்னமும் எதுவிதகுற்றச்சாட்டுகப் சுமத்தப்படவில்லை. அவர் திருமணமாகி இரண்டு பிள்ளைகளுக்கு தந்தை. அவர் கைதுசெய்யப்பட்ட நாளிலிருந்து அவரின் குடும்பம் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகியுள்ளது. அரசாங்க ஊழியர் என்ற முறையில் அவர் சேவையில் இருந்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளார். இதனல் அவரின் குடும்பம் அன்ருட சாப்பாட்டுக்கே திண்டாட வேண்டியுள்ளது. ஆகவே எவ்வித குற்றச்சாட்டுகளும் சுமத்தப்படாமல் தடுப்புக்காவலில் உள்ள அவரின் கஷ்ட நிலையைபோச்க அவர் மீது விசாரணையை உடன் நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் அன்றேல் அவரை விடுதலைசெய்து அவரின் குடும்பத்தை பாதுகாக்கவேண்டும்''

# ''இலங்கை மண்ணில் பிறந்த அனைவரும் உரிமைகளைக் கேட்க முடியும்''

## வண. வட்டினுபஹதேரர் கூறுகிறுர்

[கொழும்பு]

''இந்த மண்ணில் பிறந்த அனைத்து மக்களும் இலங்கை தம் தாய்நாடு என்ற உரிமையுடன் வாழ முடியும் உரிமைகளைக் கேட்க முடியும்.''

இவ்வாறு மினுவாங்கொடை பௌத்த சாசனரக் சங்கமயவின் ஆண்டுவிழாவில் தலைமையுரை நிகழ்த்திய அஸ்வானே தர்மரத்னேதய பிரிவெனுதிபதி வண. பண்டித வட்டினுபஹ பியரத்ன தேரர் கூறினுர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''இலங்கை ஒரு பௌத்த நாடு என்பதற்காகவும், இங்கு அதிகமாக சிங்கள மக்கள் வாழ்கிறுர்கள் என்பதற்காகவும் சிங்களவர்களாகிய நாம் மட்டும் இந்நாட்டின்மீது உரிமைகொண்டாட முடியாது.

''சமயத்தின் மூலம் இதய சுத்தி பெறவேண்டுமே தவிர குரோதங்கள், இனவெறிக் கொள்கைகள்வளர இடமளிக்கக்கூடாது. நாம் எமது இறுதி மூச்சுவரை புத்த சாசனத்தைப் பாதுகாக்க முயலவேண்டும்.

''பௌத்தசாசனத்தை வளர்த்தெடுக்க நாம் அயராது பாடுபடுவதுபோலவே ஏனைய சமயத்தவர்களும் தங்கள் சமயங்களை வளர்க்கப் பாடுபடுகிறுர்கள்.

''இம்முயற்சி சமுதாய ஒற்றுமை காணவும், ஐக்கிய மனப்பான்மையுடன் வாழவும் வழிவகுக்க வேண்டுமேயொழிய இன வெறியையோ, பொருமைக் குணங்களையோ ஏற்படுத்துவனவாக அமையக்கூடாது.

''அண்மையில் நான் பத்திரிகைகளில் படித்த செய்திகள் வேதனையைத் தருகின்றன. சில அரசியல் தலைவர்களும், பௌத்த குருமாரும் மேடைகளில் இது சிங்களநாடு. சிங்களவருக்கே இங்கு அனைத்து உரிமைகளும் உண்டு என்ற நோக்கில் பேசி இருக்கிறுர்கள்.

''நான் கேட்கிறேன் அப்படியானுல் இந்த மண்ணில் பிறந்த தமிழர்களும், முஸ்லிம்களும் எங்கு செல்ல வேண்டும்? அவர்கள் இந்த நாட்டின்மீது உரிமை கொண்டாட முடியாதா?

''எமது எண்ணங்களே எம்மை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்கின்றன. புத்த பிரானின் போதனை சகலரும் நேச மனப்பான்மையுடன் வாழவேண்டுமென்பதாகும். அனைத்து ஜீவராசிகளிடத்தும் அன்பு செலுத்துவதுதான் அன்னரின் போதனையாகும்.

''பொருமையையும், இனவாதத்தையும் ஒழித்து ஐக்கியமுள்ள சமுதாயமாக இந்நாட்டு மக்கள் அனைவரும் நேச மனப்பான்மையுடன் வாழ வேண்டும்'' என்றுர்.

இவ்விழாவில் இப்பகுதி விகாராதிபதிகள், பிரிவினுபதிகள் உட்பட நூற்றுக்கணக்கான பௌத்த குருமாரும் மற்றும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

[வெ]

### இன்றைய பலன்

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

மீனம்: பெரிய இடத்துச் சிநேகிதம் இன்று ஏற்படலாம் சிலருக்கு அரசியலிலும் ஆர்வம் பிறக்கும் புதுவழிகளின் மூலம் பணம் கிடைக்கலாம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

### கிராமோதய சபைத்தலைவர்களுக்கு

## கிராமவளங்களின் ஆய்வு பயிற்சி வகுப்பு

(மாவிட்டபுரம்)

வலி. வடக்குக் கிராமோதய சபைத் தலைவாகளுக்குக்கிராம வளங்களின் ஆய்வு குறித்த பத்திரங்கள் வழங்கப்பட்டு அவற்றின் அடிப்படையில் இம் மாதம் 8 ந்திகதி முதல் 12ம் திகதிவரை அச்சுவேலிக்கிராம அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தில் வகுப்பு நடைபெறவுள்ளது.

வலி.வடக்குப்பகுதி கிராமோதய சபைத் தலைவர்கள் நேற்றுமுன்தினம் வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர்

அங்கு கிராமவளங்கள் குறித்த விபரங்கள் அவர்களிடம் கையளிக்கப்பட்டு, அது பற்றிய விளக்கங்கள் அளிக்கப்பட்டது.

இதனையடுத்து இம் மாதம் 8 ம் திகதி முதல் 12ம் திகதி வரை அச்சுவேலி கிராம அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் இவர்களுக்கான பயிற்கிவகுப்பு ஆரம்பமாகவுள்ளது.

அங்கு இவ்விடயங்கள்குறித்தும் ஆராயப்படவுள்ளது.

ஐந்து தினங்களும் அச்சுவேலி கிராம அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தில் தங்கியிருந்து இப்பயிற்சியை கிராமோதய சபை தலைவர்கள் பெற உள்ளனர்.

## கட்டண அதிகரிப்பையடுத்து மின் இணைப்புக்களில் மோசடி!

(மாவிட்டபுரம்]

மின்கட்டண அதிகரிப்பையடுத்து மின்விநியோக இணைப்புகளில் மோசடிகள் செய்து மின்சாரப்பகுதி ஊழியர்களுக்கு டிமிக்கிவிடச்சிலர் முயல்வதால் இதுகுறித்துத்தீவிர கண்காணிப்பு செலுத்தப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை மாவட்ட அபிவிருத்திச் சபை உப அலுவலக எல்லைக்குள் சில இடங்களில் இவ்வாருன மோசடிகள் செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது பாவிக்கப்பட்ட மின் அலகுகளைக் காட்டும் மீட்டரில் திருத்தங்கள் செய்தும் நேரடியாக மின்இணைப்பை ஏற்படுத்தியும் மோசடிகள் செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து அவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

மின்கட்டண அதிகரிப்பையடுத்தே இம்மோசடிகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது மின்சாரப் பகுதி ஊழியர்கள் இதுவிடயத்தில் தீவிரகண்காணிப்பு செலுத்தி வருகின்றனர்.

சகல வீடுகளிலுள்ள மீற்றர்களுச்கும் சீல் வைக்கப்பட்டு மோசடி செய்ய முடியாமல் செய்யப்பட்டுள்ளதுடன் தீவிர நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## வெள்ளப் பெருக்கு

### 4,000 குடும்பம் பாதிப்பு

(கொழும்பு)

இரத்தினபுரி, கழுத்துறை, காலி ஆகிய இடங்களில் தொடர்ந்து பெய்த கடும் மழையினுல் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினுல் 4,000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இப்பகுதி அரசாங்க அதிபர்கள் வெள்ள நிவாரண வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர். களனி ஆற்றின் நீர் மட்டமும் அதிகரித்துள்ளது.

(வெ)

### தமிழகத்தில் கைதான தீவிரவாத தமிழ் இளைஞர்களை

# மிருகத்தனமான அரசியல் அடக்குமுறைக்கு உள்ளாக்க சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துள்ளது இலங்கை அரசு

## மனித - ஜனநாயக உரிமைகள் இயக்கம் கண்டனம்

(கொழும்பு)

இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை இலங்கை அரசிடம் ஒப்படைக்க வேண்டாம் என்று வற்புறுத்தும் அறிக்கையொன்றை மக்களின் மனித ஜனநாயக உரிமைகளுக்கான இயக்கம் இந்திய அரசுக்கு அனுப்பியுள்ளது.

மேற்படி இயக்கத்தின் சார்பில் அதன் பொதுச்செயலாளர் திரு எச். எல். உடுவாரகே இந்திய தூதுவர் மூலம் மேற்படி மகஜரை இந்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறார். அந்த அறிக்கையில்கூறப்படிருப்பதாவது.

'இந்திய பொலிசாரால் மே 19, 25–ம் திகதிகளில் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் பலரையும் தமது பொலிசாரிடம் ஒப்படைக்கும்படி இலங்கை அரசாங்கம் இந்திய அரசாங்கத்தைக் கேட்க தீர்மானித்திருப்பதாக அறிகின்றோம். அரசு இந்த இளைஞர்களை மிருகத்தனமான அரசியல் அடக்குமுறைக்குள்ளாக்குவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. என்பதே உண்மை நிலையாகும்.

### அரசியல் அடக்குமுறையை மூடிமறைக்கவே

### பயங்கரவாத தடைச்சட்டம்

அண்மைக்காலமாக இலங்கை அரசாங்கம் இலங்கைத்தமிழருக்கெதிராக ராணுவ ரீதியில் கடும் ராணுவ அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது. இதன் கீழ் பல தமிழ் இளைஞர்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். இன்னும் நூற்றுக்கணக்கானோர் மறியலில் வைத்து கொடுமைப்படுத்தப் படுகிறார்கள் இந்த மிருகத்தனமான அரசியல் அடக்குமுறையை மூடிமறைப்பதற்காக பயங்கரவாதத்தடுப்புச் சட்டம்' போன்ற பல அடக்குமுறைச்சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ள இந்த நிலைமையில் மேற்படி இளைஞர்களை இலங்கை அரசிடம் ஒப்படைப்பதானது அவர்களின் அடிப்படை மனித உரிமைகளுக்கும் ஜனநாயக உரிமைகளுக்கும் பலத்த அடியாக அமையும் என்பதுடன் அவர்களின் உயிருக்கும் ஆபத்தாக முடியும்.

### இக்கோரிக்கையை புறக்கணித்தால்..

எனவே இலங்கை அரசிடம் இந்த இளைஞர்களை ஒப்படைக்க வேண்டாம் என்று நாம் வன்மையாக வற்புறுத்துகின்றோம் எந்தக்காரணம் கொண்டும் இக்கோரிக்கை புறக்கணிக்கப்பட்டு இவ்விளைஞர்கள் இலங்கை அரசிடம் ஒப்படைக்கப்படுவார்களானல் இந்திய அரசின் அப்படியான ஒரு நடவடிக்கை அடிப்படை மனித உரிமைகளையும் ஜனநாயக உரிமைகளையும் மதிக்கும் உலக மக்கள் அனைவரதும் கண்டனத்துக்குள்ளாகும்.

## காந்திஜி

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனல் தாம்பரபரணி நதி இருமனித உயிர்களை மட்டுமல்ல ''பாரததேவிக்கே தனது வாழ்வைப் பலிதானம் ஆக்கிய'' ஒப்புயர்விலா வரலாற்றுப் பரிசான ஐயரின் படைப்பாற்றலையும் பலி எடுத்தாள். இவ்வாறு வ. வே. சு. ஐயர் ஆற்றிலே ஆவிசோர்ந்தமையைக்கேட்டுத் துடிதுடித்த சுதந்திர பாரதத்தின் தந்தை காந்திமகான் தனது யங் இந்தியா இதழின் ஆனி 18, 1925ம் திகதிய இதழில் பின்வருமாறு எழுதுகிறார் ''யங் இந்திய வாசகர்கள் என்னுடன் சேர்ந்து ஆற்றிலே மூழ்கி மரணமான வ. வே. சு. ஐயரின் மறைவுக்காக மனம் வருந்துகின்றனர். அவரை சில வருடங்களுக்கு முன் இலண்டனில் சந்தித்து மகிழ்ந்தேன். அப்பொழுது அவர்ஒரு உறுதியான தீவிரவாதி. அவர் படிப்படியாக மனம் மாறினர். தேசபக்தி எனும் நெருப்பு அவரைப்புடம் போட்டது. அவர் ஒரு உறுதியான ஒத்துழையாமை வாதியாக மாறி இறுதியில் ''சேரமாதேவி குருகுலத்தை'' தொடங்குமளவுக்கு மாறுபட்டார். ஒரு அருமையான உண்மையான முயற்சியுள்ள தேச ஊழியனின் இம்மறைவுக்கு நான் எப்பொழுதும் துயருறுகிறேன் அவரின் ஆன்மா வீடுபேறடைவதாக. காந்தியின் இவ்வார்த்தைகளில் வ. வே. சு. ஐயர் ஒரு யுகபுருஷர் என்பது தெட்டத்தெளிவாகிறது. ஐயரின் நூற்ருண்டு விழாவை பெருமையுடன் கொண்டாடும் நாம் அவர் தமிழிலக்கியத்துக்குப் படைத்துத் தந்த சிறுகதை உலகின் துணை கொண்டு ஐயரின் கனவான ''மக்களை அறிவுமயப்படுத்தும் உணர்வுமயப்படுத்தும்'' புனிதப்பணியைத் தொடர்வதே அன்னருக்கு நாமளிக்கக் கூடிய நிரந்தர நூற்ருண்டுப் பரிசாகும்.

# தமிழ் ஈழ விடுதலை அணியும் கோருகிறது

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் கைது செய்யப்பட்ட தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைச்சேர்ந்த தீவிரவாத இளைஞர்களை இலங்கைக்கு அனுப்புவதற்கு உடந்தையாக இருக்கக்கூடாது என்று இந்திய மத்திய அரசையும், தமிழ் நாடு அரசையும், தமிழ் ஈழ விடுதலை அணி கோரியுள்ளது.

தமிழ்ஈழவிடுதலை அணியின் செயற்குழுத்தலைவர் டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் இது சம்பந்தமான கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார்.

இக்கடிதத்தின் பிரதிகள், பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தமிழ்நாடு முதல் அமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன். தி. மு. க. தலைவர் திரு. மு. கருணநிதி திரு, பி. நெடுமாறன் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

''நீண்ட காலமாக இளைஞர்களை நீதிமன்றத்திற்கு கொண்டுபோகாமல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். சிலர் சாகடிக்கப்பட்டுள்ளனர். பல இளைஞர்களைக் காணமுடியாத அளவிற்கு சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

''1981ம் ஆண்டு அனைத்துலக ஆணைக்குழுவின் வெளியிட்ட அறிக்கையில் பயங்கரவாத தடுப்புச்சட்டத்தை வன்மையாக கண்டித்துள்ளது. தென்னுபிரிக்காவின் பயங்கரவாதச் சட்டங்களுடன் இலங்கை பயங்கரவாத சட்டங்கள் ஒத்திருக்கின்றன'' (மா)

## இன்று அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து இளைஞர் சங்கத்தின் அங்குரார்ப்பணக்கூட்டம் இன்று சனிக்கிழமை மாலை நல்லைஞானசம்பந்தர் ஆதீனத்தில் சட்டத்தரணி த. சோமசுந்தரம் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள சைவ இளைஞர்கள் சைவப் பெரியார்கள் பலர் இக்கூட்டத்தில் கலந்துகொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு திருக்கோயில்' ஆசிரியர் ந. ரா. முருகவேள் ஆசிச்செய்தி அனுப்பிவைத்துள்ளார். (வண். நிரு)

### யாழ். வங்கிகளில் ரூ. 100 கள்ளநோட்டு:

## சி. ஐ. டி, வங்கி அதிகாரிகள் விசாரணை தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை வங்கிக்கிளைகள் சிலவற்றிலிருந்து வாடிக்கையாளர்கள் 100 ரூபா கள்ள நோட்டுகளைப் பெற்றதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து வடபகுதியிலுள்ள சகல இலங்கை வங்கிக்கிளைகளும் கொழும்பிலிருந்து வந்த பரிசோதனைக் குழுவினரால் பரிசோதனை செய்யப்பட்டன.

இலங்கை வங்கி கொழும்பு பரிசோதனைப்பிரிவு அதிகாரிகளும் கொழும்பிலிருந்து வந்த குற்றப்புலனய்வுப் பிரிவு பொலிஸ் அதிகாரிகளும் யாழ். பொலிஸ் குற்றப்பிரிவு விசேஷ புலனய்வுப் பிரிவினரின் அனுசரணையுடன் விசாரணை நடாத்தி வருகின்றனர்.

இவ்வதிகாரிகள் மேற்கொண்ட பரிசோதனைகளிலிருந்து தற்போது எந்த 100 ரூபா நோட்டுக்களும் கள்ள நோட்டாக இல்லை என்று தெரியவந்துள்ளது,

இதனல் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டுள்ள கள்ள நோட்டுக்கள் இலங்கை வங்கியிலிருந்து தான் பெறப்பட்டன என்ற கூற்றை அப்படியே நம்பிவிடமுடியாதென்று விசாரணையாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இது எப்படி இருந்த போதிலும், வங்கிக்கு இக்கள்ளநோட்டுக்கள் எவ்வாறு வந்து சேர்ந்திருக்க முடியும் என்பது குறித்து பரிசோதனை அதிகாரிகள் தொடர்ந்து தீவிரமாக விசாரணை செய்து வருகின்றனர்,

உண்மையான 100 ரூபா நோட்டை வெளிச்சத்தில் பிடித்துப் பார்த்தால் அதில் சிங்கத்தின் நிர்வரைகோடு உருவப்படமும் (வார்ட்டர் மார்க்) மேலிருந்து கீழ்நோக்கி கறுப்புக் கோடும்காணப்படும். இதைக்கொண்டு கள்ள 100 நோட்டை இலகுவில் கண்டு பிடிக்கலாம்.

### பீதிஅடையவேண்டாம்

எனவே பொதுமக்கள் பீதியடையத்தேவையில்லை எனத் தங்கி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (டா)

## இறைகுமாரன்---

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

லூர்ரிக்கு அருகாமையில் நடைபெற்ற பொலிஸ்கான்ஸ்டபிள் நாதன் துப்பாக்கிச்சூட்டுக் கொலைச்சம்பவம், ஜயவர்த்தனபுர புதிய பாராளுமன்றத் திறப்பு விழா அன்று ஹர்த்தாலின் போது பண்டத்தரிப்பில் வைத்து பஸ் ஒன்றைச் சேதப்படுத்தியது, மூளாயில் காரைநகர் கடற்படையினரினின் வாகனத்தின் மீது நடாத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஆசியவற்றில் இவர் சம்பந்தப்பட்டவர் என்று விசாரணையின்போது தெரியவந்துள்ளதாம்.

இரகசியத் தகவலின்பேரில் விசாரணைகளை மேற்கொண்ட ஆயுதப் படையினர் அண்மையில் யாழ். நகரில் வைத்து இவ்விளைஞரைக் கைது செய்தனர்.

### ஒருவர் தேடப்படுகிறர்

இச்சம்பவங்களில் சம்பந்தப்பட்டவரெனக் கருதப்படும் பாலாவோடை சிவம் என்றழைக்கப்படும் கணபதிப்பிள்ளை சிவநேசன் என்பவரையும் ஆயுதப்படையினர் தேடி வருவதாகச் சொல்லப்படுகிறது. (மா)

## ஒற்றுமையாக...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிடப்பட்டுள்ளது.

சென்னையில் கைதான தமிழ் இளைஞர்கள் சார்பில் ஆஜராகும் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. டி. பி. ராதாகிருஷ்ணன் நேற்று முன்தினம் பிரபாகரனைச் சந்தித்ததும், கடந்த காலச் சம்பவங்களைமறந்துஒற்றுமையாக லட்சியத்துடன் இயங்க பிரபாகரன் முன்வந்ததாக வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன் தெரிவித்திருந்தது வாசகர்கள் தெரிந்ததே.

வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன் நேற்று உமா மகேஸ்வரனைச் சந்தித்தார்.

இச் சந்திப்பின்போது, பிரபாகரனின் விருப்பம் உமா மகேஸ்வரனிடம் தெரிவிக்கப்பட்டது என்றும்; உமா மகேஸ்வரனும் இதே கருத்தையே வெளியிடவிருந்தார் என்றும் வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

''கடந்தகால கசப்பான சம்பவங்கள், முடிந்துபோன நிகழ்ச்சிகளாக இருக்கட்டும்'' என்று கவலை தெரிவித்த உமா மகேஸ்வரன்; 'பிரிந்து நின்ற இரண்டு கோஷ்டிகளும் இணைந்து கொண்டன' என்றும், எக்காரணம் கொண்டும் பிளவுபடாமல் ஒற்றுமையுடன் இலட்சியத்தை அடைவதே தனது நோக்கம் என்றும் பிரபாகரனைச் சந்திக்க மிகவும் ஆவல் கொண்டிருப்பதாகவும் தம்மிடம் மனம் விட்டுப் பேசியதாக வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஒற்றுமையாக இயங்குவதை எழுத்து மூலம் உறுதிப்படுத்த உமாமகேஸ்வரன் முன்வந்ததாகவும் வழக்கறிஞர் ராதா கிருஷ்ணன் கூறினார்.

### முதல்தரசிறை

இதற்கிடையே பிரபாகரனுக்கும், வழங்கப்பட்டுள்ள முதல்தர சிறை சலுகை உமா மகேஸ்வரனுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று நேற்று பொன்னரி நீதிமன்ற நீதிபதி பணித்துள்ளார்.

### பிணை கோரவில்லை

வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன் தனது சக வழக்கறிஞர்களுடன் நேற்று நடத்திய ஆலோசனைகளைத் தொடர்ந்து சென்னையில் கைது செய்யப்பட்ட இலங்கை தீவிரவாத இளைஞர்களை பிணையில் விடுவிக்குமாறு கோருவதில்லை என்றும் இந்திய சட்டத்திற்கமைய வழக்கை எதிர்கொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

### இலங்கை அதிகாரி டில்லி விஜயம்

நிலைமை இவ்வாறிருக்க, இலங்கை அரசு சார்பு பிரதம வழக்குத்தொடுநர் திரு. திலக் மாரப்பன சில சட்ட ஆலோசகர்களுடன் புதுடில்லி வந்துள்ளார்.

## குவைத்---

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

வந்தபோது இயந்திரத்துப் பாக்கியால் அவரை நோக்கிச் சுட்ட ஒருவர் அங்கு நின்ற டாக்ஸியில் ஏறித் தப்பிச் சென்றுவிட்டார் என்றும். விசாரணை நடத்திய பொலிசார் அந்த டாக்ஸியைக் கைப்பற்றியுள்ளனர் என்றும், அறிவிக்கப்பட்டுள்ளது,

### இந்திரா அனுதாபம்

இக் கொலைச் சம்பவம் குறித்து குவைத் தலைவருக்க இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தி தமது அனுதாபத்தைத் தெரிவித்துள்ளதுடன். இந்தியாவிலிருக்கும் குவைத் தூதரகத்திற்கு தகுந்த பாதுகாப்பு அளிக்குமாறும் கொலைஞனைக் கண்டுபிடிக்குமாறும் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார் (ஓ)


## வெற்றிடங்கள்

கண்ணாடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள பபுளர் (Bubblers), ஹெல்ப்பர் (Helpers), புளோவர் (Blowers) போன்றவர்கள் தேவை.

அனுபவமுள்ள Bottle and Press Mechine இயக்குநரும், ஹெல்ப்பரும் தேவை.

நல்ல சம்பளம் கொடுக்கப்படும்.

உடனே நேரில் வரவும்.

### சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ்

நீர்வேலி.

3406


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 13-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஆம் ஜூன் மீ 5–ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81.
Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone 389 and 8126.